Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 13 27-06-94 திங்கட்கிழமை ஓசை 129

27-6-1994

## உலகசனத்தொகையில் 385கோடி பேர் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள்

1994-ம் ஆண்டு நடுப் பகுதிவரை எடுக்கப்பட்ட உலக சனத்தொகை மதிப்பீட்டின் படி உலகில் சுமார் 567 கோடியே 28 லட்சத்து 15 ஆயிரம்பேர் வாழ்கிறார்கள். இதில் 385 கோடியே 75 லட்சத்து 14 ஆயிரம் பேர் 15வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சமய அடிப்படையில் நோக்கின் கிறிஸ்தவர்கள் 190 கோடியே 53 லட்சத்து 10ஆயிரம் பேர் எனவும், இஸ்லாமியர் 103 கோடியே 93 லட்சத்து 31 ஆயிரம் பேர் எனவும், இந்துக்கள் 76 கோடியே 60 லட்சத்து 72 ஆயிரம் பேர் எனவும் புத்த மதத்தினர் 33 கோடியே 75 லட்சத்து (6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட தேர்தல் குறித்து

# ஜனாதிபதி டி.பி. தீவிர பரிசீலனை

## செயலகம் இடம் மாற்றுவது சாத்தியமாகாத விடயம்

-யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தை தெல்லிப்பழைக்கு இடம்மாற்றம் செய்வது சாத்தியமாகாத விடயம் என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரசுக்கு தெரியப்படுத்தவுள்ளார்.

யாழ். செயலகத்தை உடனடியாக தெல்லிப்பழைக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரச அதிபருக்கு அவசர வானொலிச் செய்தியொன்று ஏற்கனவே வந்திருந்தது. இதற்கு பதிலளிக்கும் முகமாகவே அரச அதிபர் மேற்படி தகவலை அரசுக்குத் தெரியப்படுத்தவுள்ளார்.

செயலகத்தை இடமாற்றம் செய்ய முடியாமைக்கான காரணங்களை தெளிவாக விளக்கியும், இவ்விடயம் குறித்து தமது முடிவை அழுத் (6ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையங்களை ஒன்றிணைக்க அரசியல் சட்டத்தில் இடம் உள்ளதாம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திலும் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பரிசீலனை செய்துள்ளார். இம் மாவட்டத்தில் சுமார் நானூறு வாக்களிப்பு நிலையங்கள் இருப்பதாகவும், இவ் வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசியல் சட்டப்படி வசதி இருப்பதாகவும் அரசியலமைப்பு விவகாரத்துறை அமைச்சர் கே.என். சொக்ஸி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரத்தை தமது விருப்பத்தைப் பொறுத்து நடாத்தலாம் என்றும். தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான கமிட்டி தனது இறுதி வாசகத்தை தயாரித்து இருந்தது எனவும், இவ்வாசகம் அக்கமிட்டியினால் பரிசீலிக்கப் பட இருந்த சமயத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பத்தாவது பாராளுமன்றம் இவ் விடயத்தைப் பரிசீலிப்பதற்கு இது தகுந்த முன்மாதிரியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேசமயம் யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்தும் முயற்சியின் ஒருகட்டமாக யாழ் அரச அதிபரை உடன் கொழும்பிற்கு வருமாறும் யாழ் செயலகத்தை வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு மாற்றுமாறும் கோரியிருந்தமை தெரிந்ததே.

## கிறிஸ்தவ நல்லெண்ணக் குழுக்கள் சமாதான முயற்சிகளை நிறுத்தின

### விஜேதுங்காவுடன் அரசியல் தீர்வுகிட்டாது என அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

டி. பி. விஜேதுங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஏற்படும் சாத்திபக் கூறு கிடையாது என கிறிஸ்தவ நல்லெண்ணக்குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இப் பிரச்சினை நாட்டுக்கு ஓர் ஆபத்தானதாக இருந்த போது இதில் டி. பி. விஜேதுங்கா அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரிய வில்லை என்றும் எனவே தமது நல்லெண்ண முயற்சிகளை தாம் ஒத்திவைத்துள்ளதாகவும் நல்லெண்ண முயற்சியில் ஈடுபட்ட கிறிஸ்தவ அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஆயர் மேதகு கலாநிதி நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, ஆங்கில திருச்சபை ஆயர் மேதகு கென்னத் பெர்னாண்டோ, மெதடிஸ்த திருச்சபை தலைவர் கிங்சிலி முத்தையா ஆகியோரடங்கிய தூதுக் குழுவினரே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இவ் வருட ஆரம்பத்தில் இத் திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினரிடையே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க,நி)

## கிறிஸ்தவ தொண்டர்கள்மீது பௌத்தர்கள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ அமைப்பொன்றின் வெளிக்கள வேலை மேற்கொண்ட தொண்டர்கள் மீது பௌத்த பீடங்களைச் சேர்ந்தோர் தாக்குதல் நடத்தியுள்ளதாக கிறிஸ்தவ அமைப்பொன்றின் தலைவர் தெரிவித்துள்ளார். இச் சம்பவம் ...

தாக்குதல் நடைபெற்றதாகவும் இதில் கிறிஸ்தவ அமைப்பின் தொண்டர்கள் காயமடைந்ததாகவும் இது தொடர்பாக பொலிசாரிடம் முறையிட்ட போது பொலிசா (6ஆம் பக்கம் பார்க்க)

## பொ. ஜ. முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் சந்திரிகாவிற்கு முதலிடம்

(கொழும்பு)

பொதுஜன முன்னணியின் சார்பில் வேட்பாளர் பட்டியலில் முதலிடம் திருமதி ...

இருக்கும் எனவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவ் வட்டாரங்கள் ...

என்ற சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும் தெரிவித்தன. ...

## ஒரு பொலிஸ் பலி

(கொழும்பு)

பொதுஜன முன்னணியின் சார்பில் வேட்பாளர் பட்டியலில் முதலிடம் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கே வழங்கப்படும் எனவும். இதன்மூலம் அவர் சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்தின் பிரதமர் பதவியை ஏற்கக்கூடியதாக இருக்கும் எனவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவ் வட்டாரங்கள் இது தொடர்பாக மேலும் கூறுகையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பாராளுமன்றத்திற்கே அதிகாரம் மாற்றப்படவேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும் தெரிவித்தன. இத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது மக்கள் முன்னணி வெற்றி பெற்று அரசியலமைப்பு மாற்றப்படும்போது அதிகாரமுடைய பாராளுமன்றத்தின் பிரதமராக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு பொலிஸ் பலி

கந்தளாய் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் கடந்த 16 ஆம் திகதி திடீர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர் இத் தாக்குதலில் பொலிஸ்காரரான அனில்குமார என்பவரே கொல்லப்பட்டவராவார்.

ளதாக கிறிஸ்தவ அமைப்பொன்றின் தலைவர் தெரிவித்துள்ளார். இச் சம்பவம் குறித்து அவர் தனது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டுள்ளார்

தமது ஆலயக் குழுக் கூட்டமொன்றுக்கு சென்று வந்த கிறிஸ்தவ அமைப்பொன்றின் பிராந்தியத் தலைவரே மேற்படி தகவலைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் அம்பாறை மாவட்டத்தல் இது போன்ற

(6ஆம் பக்கம் பாரக்க)

## கொழும்பில் பிரதமர்ரணில் போட்டியிடுவதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா எதிர் வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு அமைச்சர் சிறிசேன கூரே ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து அம் மாவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமாவுடன் தொலைபேசி தொடர்பு கொள்ள தடை

(கொழும்பு)

தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உடல்நிலை இல்லை என அவருக்குச் சிகிச்சையளிக்கும் சிங்கப்பூர் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய' நிறுவனத்தினர் அண்மையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் தொலைபேசிமூலம் தொடர்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையங்கள் உசார் நிலையில்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவந்ததை அடுத்து நாடுபூராகவும் உள்ள சகல பொலிஸ் நிலையங்களும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மறு அறிவித்தல் வரை சகலபொலிசாரின் லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை முதல் சகல அரசியல் வாதிகளுக்கும் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் ரோந்துப் பணிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. தேவை ஏற்படின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும். தேவை ஏற்படின் பொலிசாருக்கு உதவியாக முப்படைகளின் உதவிகளும் பெறப்படும் எனவும் இது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இனம்தெரியாத இளைஞர் சடலம் அச்சுவேலிப் பகுதியில் மீட்பு



அச்சுவேலிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இனம்தெரியாத வாலிபர் ஒருவரின் சடலம் தமிழீழக் காவல்துறையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சங்கானை வீதி அச்சுவேலி தென்மூலையிலுள்ள பற்றைக் காணிக்குள் காணப்பட்ட இச் சடலத்தின் அருகே துவிச்சக்கர வண்டியொன்றும் காணப்பட்டது. நாலடி மூன்றங்குல உயரம், நிறம் கறுப்பு, கறுப்பு நிறத் தலைமயிர், வயது சுமார் 25, சாம்பல்நிறத்தில் நீலநிறக் கோடிட்ட சேட்டும் கறுப்புநிற நீளக் காற்சட்டையும் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது. என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்கள்பலர் தேர்தலில் புறக்கணிக்கப்படலாம்

பல சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இம் முறை ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட அனுமதி கிடைப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாக காணப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு கட்சி அனுமதி தமக்கு கிடைக்காதுவிட்டால் தாம் வேறு கட்சிகளுக்கு சென்று அதன் மூலம் அக் கட்சியின் அனுமதியை பெற்றுக் கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து யாழ். கரையோரப் பகுதிகளைநோக்கி எறிகணை வீச்சு நடத்தப்பட்டன.

அதே வேளை அன்றைய தினம் காலை 6. 45 மணியளவில் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டன. எறிகணைகள் குருநகர்பகுதியிலும்கடலிலும் வீழ்ந்துவெடித்தன. சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

(21, 17)

# நிர்வாக அதிகாரிகள் கெடுபிடி; தமிழ் மக்கள் பெரும் அவதி

## பி. பி. ஸிசெய்தியாளர் ஜோர்ச் ஆர்னி

(கொழும்பு)

சிறிலங்கா ஆட்சி பீடம் மாறலாம். நடைபெற விருக்கும் தேர்தல் அதனை சாத்தியமாக்கலாம். இதில் அரசியல் வாதிகள் மாறலாம். ஆனால் நிர்வாக அதிகாரிகள் மாறும் சந்தர்ப்பம் வெகுவாக குறைவான சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந் நிர்வாக அதிகாரிகளின் கெடுபிடியினால் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் கஷ்டப்படுவதாக பி பி. ஸிக்கான இலங்கை செய்தியாளர் ஜோர்ச் ஆர்னி தெரிவித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**காவேரி**

**சியாக்காய்ப்பவுடர்**

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனமாகிய 6 வகை இயற்கைப் பொருட்களை அளவுப் பிரமாணத்தின்படி தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றது. சியாக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சியாக்காய்ப்பவுடர் என்று கேட்டு வாங்கவும். (8598)

**SLEAS**

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன், கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. -கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (8617)


## கணித பாட விசேடபயிற்சி

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கணிதபாடத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் க. பொ. த. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கும், க. பொ. த. உயர்தர வகுப்பில் கணிதம் சித்தியடையாது ஏனைய தகைமைகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்குமென விசேட முறையிலான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சபை பத்தாயிரம் ரூபா செலவில் பெற்றுக் கொடுத்த கணித உபகரணங்களைப் பயன்படுத்தியும், புதிய அணுகுமுறை மூலமும் மூன்று குழுக்களாக பிரித்து சுமார் எண்பது மாணவர்கள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகலில் இவ்வாறான கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வகுப்புகளில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

## நல்லின ஆடுகள்

(கொழும்புத்துறை)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழு பகுதியினரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும 15 குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள்

# தமிழ் இளைஞர்கள் கைது கொழும்பில் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யும் நடவடிக்கை கடந்த சில நாள்களாக மீண்டும் தீவிரப்பட்டுள்ளது.

விடுதிகளிலும் பொது இடங்களிலும் வீடுகளிலும் இரவில் பொலிசார் சென்று இளைஞர்களை விசாரணைக்கென அழைத்துச் செல்கின்றனர். கூடுதலாக அடையாள அட்டை இல்லாதோர் பொலிசில் பதிவு செய்யாதோர், கொழும்பில் தங்கியிருக்க தகுந்த காரணம் கூறாதோர் ஆகியோர் கைதாகின்றனர்.

கடந்த செவ்வாய் இரவு கொட்டாஞ்சேனை புளூமெண்டால் தொடர் மாடி வீடுகளில் பொலிசார் நடத்திய சோதனையில் 10 பேர் கைதாகினர். ஜேவதனராம வீதியில் உள்ள விடுதி ஒன்றிலும் இரவு சில இளைஞர்கள் கைதாகினர்.

# வாழைச்சேனை சம்பவம் பின்னணியில் அரசியலாம்

(கோழும்பு)

வாழைச்சேனையில் அண்மையில் பள்ளிவாசல் அருகே முஸ்லிம்கள் மீது பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூடு அரசியலுடன் சம்பந்தப்பட்டது என மட்டக்களப்புமாவட்டத்தில் உள்ள சில அரசியல்வாதிகள் கூறியுள்ளனர்.

எதிர்வரும்பொதுத்தேர்தல்களில் ஆளும் கட்சி மீதுபொதுமக்கள் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் பொலிசாரின் இந்நடவடிக்கைக்கு பின்னணியில் அரசியல்வாதிகள் உள்ளனர் எனவும் இவ்வட்டாரங்கள் கூறியுள்ளன.

# முதலாவது பிறந்ததின வாழ்த்து 27-06-1994



**செல்வன் டினுஷன்**

டென்மார்க்கில் வசிக்கும் இராசகுமார் (நுணாவில்) மதிகலாவிடத்தற்பளை) தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் டினுஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை டென்மார்க்கில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். டினுஷனை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் மாமாமார், ஜெகன் (இந்தாலி), கருணன் (சுவிஸ்), நந்தன், மோகன, சித்திமார் நிதி, ரூபி, மாமிமார் தர்சிகா, ஜாளினி, நிலாந்தினி, துளசிகா மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றனர்.

# யாழ்ப்பாண நூலகத்தை நான் எரிக்கவில்லை

## காமினி திசாநாயக்கா கூறுகிறார்

(கொழும்பு)

ஆயுதக்குழுவின் இணக்கப்பாட்டுடன்தானா வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பது தொடர்பாக நாம் ஆராய வேண்டும் என காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்களை தள்ளிவைக்க வேண்டும் என்பதில்லை. சகல தரப்பினருடனும் ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும்.

யாழ்ப்பாண நூலகத்தை எரித்ததாக என்னை குற்றஞ் சாட்டுகின்றன'. 1981 இல் யாழ்ப்பாணத்திற்கு நான் சென்ற வேளையில் அந் நூல் நிலையம் ஏற்கனவே எரிந்து விட்டது. எனவும் காமினி திசாநாயக்கா குறிப்பிட்டார்.

1993-94 கல்வியாண்டில்

# வைத்திய பீடத்திற்கு 200 மேலதிக இடங்கள்

1993/94 ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு கடந்த வெள்ளி முதல் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் 1993 ஆகஸ்ட் நடந்த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதே வேளை இவ்வருடத்தில் மருத்துவ துறைக்கு 200 மாணவர்களை மேலதிகமாக அனுமதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது இவ்வருடம் 800 பேர் வரை அனுமதிக்கப்பட்டனர். 1993/94 ஆண்டில் 1000 பேர் வரை அனுமதிக்கப்படுவர். இவர்களை கூடுதலாக அனுமதிக்கும் வகையில் வைத்திய பீடங்களுக்கு மேலதிக வசதி செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பதவி உயர்வு பெறவிருந்த கான்ஸ்டபிள் மரணம்

## பயிற்சியின் போது மாரடைப்பு

(கொழும்பு)

பொலிஸ் சார்ஜென்ட் பதவி உயர்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சியிலீடுபட்டிருந்த போது மாரடைப்பு ஏற்பட்டு மரணமான சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது

53 வயதான கீர்த்திரட்ண என்ற இந்த கான்ஸ்டபிள் காலி பொலிஸில் 20 வருட சேவையைப் பூர்த்தி செய்திருந்தார். இதைத் தொடர்ந்து இவர் சார்ஜென்ட் ஆக பதவி உயர்வு வழங்கும் பொருட்டு இவர் களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரிக்கு அழைக்கப்பட்டார். அங்கு பயிற்சியிலீடுபட்டிருந்த போது மாரடைப்பினால் காலமானார்.

தட்டெழுத்தாளர் நிர்வாகசேவை, புலமைப்பரிசில்

# ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றவராக இருப்பின் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி யூலை மாதம் 15ஆம் திகதியாகும்.

0 0 0

பட்டதாரிகளுக்கான பொது நலவமைப்பு நாடுகள் பட்டபின்படிப்பு புலமைப் பரிசில்கள் அளிக்கும் பொருட்டு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்புலமைப் பரிசில்கள் 1995 ஒக்ரோபர் மாதம் தொடங்கும் கல்வியாண்டிலிருந்து இங்கிலாந்து, கனடா, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நைஜீரியா ஆகிய நாடுகளில் உயர் கல்வி கழகங்களில் செல்லுபடியாகும்.

விண்ணப்பங்கள் யூலை 15 ஆம் திகதிக்கு முன்பாக உயர் கல்வி அமைச்சு வெளிநாட்டு முகவர் நிலைய கிளைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

0 0 0

அரச சேவையில் உள்ள தட்டெழுத்தாளர் சேவைக்கும் கூட்டுத்தாபனங்களில் உள்ள தட்டெழுத்தாளர் சேவைக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப்போட்டி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் மொழிமூலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் விண்ணப்ப முடிவுத் திகதி யூலை மாதம் 22ஆம் திகதியாகும்.

மேற்படி விண்ணப்பங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஈழநாதம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

# நினைவு கூருகின்றோம்...

## 27-06-1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - புலிபாய்ந்தகல் பகுதியில் இருந்து எமது முகாமொன்றின்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜிம்கெலி** (சின்னப்பிள்ளை நடராசா - கிரான் - மட்டு)

**லெப். மொட்டைக்கஜன்** (அழகரத்தினம் மணிவண்ணன் - கல்லடித்தெரு - மட்டு)

**குங்கா** (நாகலிங்கம் கங்காகரன்-குமாரவீதி, கிரான் ...

...லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழிளைஞன்

1992ஆம் ஆண்டு வவுனியா - சூடுவெந்தபுலவில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.ரகு** (பெரியதம்பி குகதாஸ் - கனகராயன் குளம் - வவுனியா)

**2-ம்லெப்.புகழேந்தி** (நாகராசா மோகனராசா - வாரிக்குட்டியூர் - வவுனியா)

**2-ம் லெப்.மகேந்திரன்** (பூலோகசிங்கம் பத்மலோஜன் - சேமமடு, ஓமந்தை - வவுனியா)

**லெப்.சிலம்பரசன்'றம்போ** (பரமானந்தம் தயாளன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

தமிழீழக் கடற்பரப்பில் (தாளையடி) 28 - 2 - 92 அன்று சிறிலங்காக்கடற்படையினருடனான சமரின் போது ...

னரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும 15 குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் அண்மையில் கொழும்புத்துறை மேற்குச் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

ரூபி, மாமிமார் தர்சிகா, ஜாளினி, நிலாந்தினி, துளசிகா மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றனர்.

அன்னை களஞ்சியம், விடத்தற்பளை. (8639)

தகவல்: இராசா (அம்மப்பா)

# 90-ம் நாள் நினைவஞ்சலி

அன்னைமடியில்:- 13 – 08 – 1934



இறைவனடியில்:- 29 – 03 – 1994

அமரர் - உயர் திரு.

## முருகேசு ஜெயவீரசிங்கம் அவர்கள்

### வரணியூர்

மாங்குளம் தன்னில் மகத்தான சேவைதனை,
மக்களுக்கு சேவை செய்து நன்மை பல செய்தவரே,
பல சேவைதனைச் செய்யும் சங்க வளர்ச்சிதனை,
வளமுடன் வளர்த்திட்டவரே,
தொடர்ந்திட்ட உம் பணியை தொடராமல் செய்திட்ட,
காலனவன் செய்த விதியதுவோ......?
உம் பணியை எம் நெஞ்சில் நிலைத்திட்டு சென்றீரோ,
தொண்ணூறு நாட்கள் சென்றாலும் உம் நினைவு,
தொடர்கின்றதே எம் நெஞ்சமதில்......?

தங்கள் ஆத்ம சாந்திக்காக எமது
கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

வ. வ. ப. நோ. கூ. சங்கம்,
நெடுங்கேணி.

(8588)

**லெப். மொட்டைக்கஜன்** (அழகரத்தினம் மணிவண்ணன் - கல்லடித்தெரு - மட்டு)

**கங்கா** (நாகலிங்கம் கங்காதரன்-குமாரவீதி, கிரான் - மட்டு)

**குமார்** (வில்லியம் அருள்நாதன் - ஏறாவூர் - மட்டு)

**லோகேஸ்** (நல்லரத்தினம் லோகேந்திரராஜா - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

**ரவி** (பொன்னையா தர்மராஜா - கறுவாக்கேணி - மட்டு)

**சைமன்** (மயில்வாகனம் மாதவன் - கிரான்-மட்டு)

**சிந்து** (சித்திரவேல் ஜெயராசா - கிரான் - மட்டு)

**சரவணை** (பிள்ளையான் சவுந்தரராஜன் -கிரான்மட்டு)

**றொசான்** (ஜயாத்துரை அமிர்தநாதன் - மயிலியதனை, தொண்டமானாறு - யாழ்)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளத்தில் எதிர்பாராதவிதமாக எமது மிதிவெடியில் சிக்கியதில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் சபேசன்** (பேரம்பலம் கிருஷ்ணபிள்ளை - புலோலி தெற்கு, பருத்தித்துறை - யாழ்)

1989ஆம் ஆண்டு தமிழகம் - தஞ்சாவூரில் தமிழ்நாடு காவல்துறையினர் கைதுசெய்ய முயன்றபோது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். போசன்** (பஞ்சலிங்கம் சிவகுமாரன்-கோயிலடி - மட்டு)

மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**மதன்** (வேலுப்பிள்ளை இராஜேந்திரன் - செல்வநகர் - கிளிநொச்சி)

**லெப். யோக்கின்** (செந்தில்வேல் சக்திவேல் - காளிகோயிலடி - வல்வெட்டித்துறை)

1990ஆம் ஆண்டு அம்பாறை - அறுகம்பை முகாமில் சிறிலங்காப் படையினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள். தாண்டியடிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழிளைஞர்கள்.

மட்டு - கோப்பாவெளி 3ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மருதங்கேணியில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்,

யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள். சுன்னாகத்தில் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஓவியக் கலைஞர்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்

தயாளன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

தமிழீழக் கடற்பரப்பில் (தாளையடி) 28 - 2 - 92 அன்று சிறிலங்காக்கடற்படையினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து சிகிச்சையின் போது மந்திகை மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ஆதித்தன்** (குகநாதன் கேதீஸ்வரன் - காட்டுப்புலம் தொண்டமானாறு - யாழ்)

மட்டு-கொக்கட்டிச்சோலை வவுணைத்தீவு, 19-ம் கட்டை உன்னிச்சை முகாமிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வெளியேறிய இராணுவம், நெல்லிக்காடு, பாலம் போட்டமடு, சாமாண்டியாறு, தாண்டாமலை பகுதிகளில் கடும் துப்பாக்கிச்சூட்டிலும், வெட்டியும் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

1993-ம் ஆண்டு மட்டு - மாவில்கங்கைப் பகுதியில் எமதுமுகாமை சுற்றிவளைத்து தாக்க பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் நளன் ஏகாம்பரராஜ்** (சரவணை விஜயகுமார் - கொம்மாந்துறை - மட்டு)

**லெப். நவிராஜ்** (கோவிந்தபிள்ளை அரியரட்ணம்- குருமண்வெளி - மட்டு)

**லெப். மைக்கல்ராஜ் கலைஞன்** (கணபதிப்பிள்ளை சாம்பசிவம் - நாவலடி - மட்டு)

**2-ம்லெப். சிறிபரதன்** (ரட்ணம் யோகேந்திரன் - நாகபுரம், மகிளூர் - மட்டு)

**2-ம்லெப். அமரகாசன்-சுரேஸ்** (அந்தோனி மரியதாஸ் - நாவிதன் வெளி - மட்டு)

மட்டு - அம்பாறை, 39-ம் கிராமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். நிசார்-அமுதப்பிரியன்** (சதாசிவம் விஸ்வலிங்கம் - திக்கோடை - மட்டு)

மட்டு - மகிழுவெட்டுவான் பகுதியிற் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். ரகுபரராஜ்-மதன்** (டேவிற் அன்ரனி - ஏறாவூர் - மட்டு)

விளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான ஒரு இளம் பெண்.

மட்டு 39-ம் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டுப் பலியான எமது ஆதரவாளர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9884)

# விலங்கியல்




## ஒட்டுண்ணியியல்
### என்ரமீபா

என்ரமீபா எனும் சாதிப்பெயரை Leidyஎன்பவர் 1879இல் உருவாக்கினார். ஆனால் ருசிய விலங்கியலாளர் Losch என்பவர் தான் 1875இல் Amoeba Coli எனும் பேரில் Entamoabe Histolytica வைப் பற்றி முதல்முதலில் விபரித்தார். Schaudinn என்பவர் 1903இல் Entamoeba Histolytica எனும் இனத்தை நிலைநிறுத்தியதோடு நோய்க்குரியதும் நோய் அற்றதுக்குரியதுமான வகைகளை வேறுபடுத்தினார். மனித குடலில் இச்சாதியைச் சேர்ந்த மூன்று இனங்கள் காணப்படுவதினால் இவற்றில் பொதுவான ஈடுபாடு காட்டப்படுகின்றது. Walkerஉம் Sellards உம் அமீபா வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் நோய்க்குரியதான E. histolytica வையும் நோயை ஏற்படுத்தாத E. coliயையும் E. gingivalisயையும் விபரித்தனர். இவைகள் யாவும் பாகுபாட்டியலில் கணம் புரட்டோ சோவாவுக்குரிய வகுப்பு இறைசோபோடாவைச் சேர்ந்த அங்கிகளாகும்.

**E. histolytica**

இது இன்று உலகம் பூராக பரந்து காணப்படும் ஒரு கலப் புற ஒட்டுண்ணி யாகும். அயனமண்டல, உப அயனமண்டல பிரதேசங்களில் மிகவும் பரந்து காணப்படுவதாக இன்று நம்பப்படுகிறது. மேலும் சுகாதார வசதிகள் அற்ற, சுகாதாரப்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்காத வெப்பமான பிரதேசங்களில் இது சாதாரணமாகக் காணப்படுகின்றது. இவ்வொட்டுண்ணியை பரவல் அடையச் செய்வதில் காவியோ, அல்லது இடைவிருந்து வழங்கியோ ஈடுபடுவதில்லை இவை நாம் உண்ணும் உணவு, குடிக்கும் நீர் வழியாகவே தொற்றுதல் அடைகின்றது. இத்தொற்றுதலை ஏற்படுத்துவதில் வீட்டு ஈ, கரப்பான், உணவைக் கையாளுபவர்கள் ஆகியன பொறிமுறைக் காவிகளாக காணப்படுகின்றன.

இக்காவிகள் நோய் உள்ளவரின் மலத்தில் காணப்படும் தொற்றும் பருவநிலையை அதில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது இன்னொரு புதிய முதல் விருந்து வழங்கியான மனிதனைத் தொற்றச் செய்வதாகும். எனினும் வீட்டுஈதான் பொதுவான காவியாகத் தொழிற்படுகின்றது. நோயாளியின் மலம் தரைகளில் காணப்படும் போது தொற்றும் பருவநிலைகள் வளியினால் எடுத்துச் செல்லப்பட்டு குடிநீர் நிலைகளைஅடைவதன்மூலமும்தொற்றுதல் அடையலாம்.

இவ்வொட்டுண்ணிகள் மனிதனின் குருட்டுக் குடலிலிருந்து குதம்வரை காணப்படும். பெருங்குடலில் சீதப்படை, உபசீதமுளிப்படையில் வாழ்ந்து மருத்துவத்தில் சீதப்பேதி என அழைக்கப்படும் அமீபா வயிற்றுளைவு அல்லது அமீபிக் வயிற்றோட்டம் (Amoebic Dyrenlery /Amoebiasis) எனும் நோயை ஏற்படுத்துகின்றது. இது பதியநிலை, சிறைப்பைநிலை ஆகிய இருநிலைகளில் காணப்படும்.

நிறைவுடலி அமீபாவின் கட்டமைப்பு

இது முக்கியமான இயல்புகளில் சுயாதீனமாக வாழும் அமீபாவை ஒத்துள்ளது. நிறைவுடலி நிலையில் தான் போசனை உட்கொண்டு வாழ்வதனால் போசனைச் சிற்றுயிர் நிலை எனப்படும். இந்நிலை மனிதனுக்கு நோயை ஏற்படுத்தும் தெற்றற்ற ஒட்டுண்ணிப் பருவமும் ஆகும். இது 10-40 மைக்கிறோன்வரை விட்டமுடையது ஆகும்.

நிறைவுடலி அமீபா தனிக்கலத்தினால் ஆனது. முதலுரு மென்சவ்வினால் சூழப்பட்டது.இம்மென்சவ்வினூடு ஒட்சிசன் போன்றவை உள்ளெடுக்கப்படுவதோடு கழிவுகள் வெளியேற்றப்படும்.குழியவுரு தெளிவான பளிங்குருத்தன்மை வாய்ந்த புறக்கலவுருவையும், சிறுமணியுருவான திரவத்தன்மை வாய்ந்த குழியவுருவையும் கொண்டிருக்கும். அகக்கலவுருவில் வண்டில்சில்லு வடிவமான தனிக்கருவும், செங்குழியம் கொண்ட பல உணவுப் புன்வெற்றிடங்களும் காணப்படும். செங்குழியம் கொண்டிருக்கும் இயல்பின் அடிப்படையில் நோயற்றவற்றிலிருந்து பிரித்தறியக் கூடியதாக இருக்கும்.

தனியான, குறுகிய, நீளமான போலிப்பாதத்தைக் கொண்டிருக்கும். இது பெரும்பான்மையாக புறக்கலவுருவினால்ஆனது. போலிப்பாதத்தைக் கொண்டிருப்பதால் அசையும் இயல்புடையதாகும். சூழவுள்ளவிருந்துவழங்கிப் பாய்பொருளுடன் முதலுரு சமபிரசாரண நிலையில் இருப்பதினால் சுருங்கத்தக்க புன்வெற்றிடத்தைக் கொண்டிருப்பதில்லை. இவ்வியல்பு நன்னீரில் வாழும் சுயாதீன அமீபாவிலிருந்து வேறுபடுத்தி அறியமுடியும். அத்துடன் இவை காற்று இன்றிய சுவாசத்தினை மேற்கொள்ளும்.

வாழ்க்கை வட்டம்

1. மனிதனின் பெருங்குடலின் சீதச்சவ்வுக்கு கீழான படையில் நிறைவுடலி போசனையை உட்கொண்டு வாழும் முக்கியமாக செங்குழியத்தையும் விருந்து வழங்கியின் இழையம், பற்றீரியா ஆகியனவற்றை உள்ளெடுக்கும் போசனைச் சிற்றுயிர் ஆகும்.
விலங்கு முறை போசனையை உடையதாக இருந்த போதிலும்,அழுகல் வளரிப்போசனை முறையையும் உடையன.
2. நன்கு வளர்ச்சியடைந்த பின் இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் மூலம் இரு கூற்றுப் பிளவு முறைக்கு உட்பட்டு இரு புன்னமிபாக்களைத் தோற்றுவிக்கும் இவையும்தாய அமீபா போன்று உணவு உட்கொண்டு வளர்ந்து இலிங்கமில் முறை இனப் பெருக்கத்தில் ஈடுபடும்.
3. சிறிது காலத்தின் பின் தானேசுரந்த கொற்றினாலானஒளியூடு புகவிடக் கூடிய தடையுள்ள, நிறமற்ற, மெல்லிய சிறைப்பையால் சூழப்பட்டு கோளவுரு நிலையை அடையும் இதன்போது கரு ஒருபுறம் தள்ளப்பட்டு கிளைக்கோஜன் சேமிப்பு உணவு கூடி, உணவுப் புன்வெற்றிடங்கள் அற்ற நிலையில் காணப்படும்.
4. சிறைப்பை நிலையில் கரு இரு தடவை பிரிகை அடைந்து நான்கு கருக்கொண்ட நிலைதோன்றும் இந்நாற் கருக் கொண்ட வட்டமான, நுண்ணிய சிறைப்பை நிலையே தொற்றும் பருவ நிலையாகும். இது 10 - 20 மைக்கிரோன் விட்டமுடையது
5. இச் சிறைப்பை நோயாளியின் மலத்துடன் வெளியேற்றப்பட்டு உண்ணும் உணவு, குடிக்கும் நீர் என்பவற்றை ஏதோ ஒருமுறையில் அடைவதன் மூலம் வாய்மூலம் உணவுக் கால்வாயைச் சென்றடையும். தனிக்கரு நிலையில் வெளியேற்றப்படின் சிறைப்பையிலிருந்து வெளியேற்றப் படாது இறந்துவிடும்.
6. உணவுக்கால்வாயினுள்சிறைப்பையினுள் நான்கு மகன் அமீபாக்கள் உருவாகும்.
7. சிறுகுடலில் உள்ள திருச்சின் நொதியத்தால் சிறைப்பை கரைக்கப்பட சிறைப்பையை விட்டு புன்னமீபாக்கள் தோன்றும்
8. சில சமயம் மூன்றாம் தடைவையும் இழையுருப் பிரிவுமூலம் கருவும், குழியவுருவும் பிரிகை அடைந்து எட்டு மகன் அமீபாக்கள் வெளியேறும்.
9. இவை பெருங்குடலை அடைந்து புதிய வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும்
10. குருதி அருவியை அடைந்து ஈரல்வாயினாளம் மூலம் ஈரல், மூளை ,சுவாசப்பை, மண்ணீரல் ஆகியவற்றில் தொற்றுதலை ஏற்படுத்தி அங்கும் குடலில் தோற்றுவித்தது போன்று கட்டிகளை உருவாக்கும்

### நோய் அறிகுறிகளும் வாழ்க்கை வட்ட நிலைகளும

1. மலம் கழியும்போது இரத்தமும் சீதமும் வெளியேறல்:-

புரதப் பிரிநொதியங்களை கலத்திற்கு வெளிப்புறமாக சுரப்பதன் மூலம் பெருங்குடல்சுவர் இழையங்களை தாக்கி சீதமென்சவ்வு சிதைக்கப்பட்டு குடற்சுவரை சேதப்படுத்தும். இதனால் குடுவையுருவான புண்களை உருவாக்கும். இதன்போது குருதிக்கலன்கள் உடைபட்டு மலம் கழியும்போது இரத்தமும் சீதமும் வெளியேறுவதோடு புண்ணில் நோவும் உண்டாகும். சிலவேளை குடலில் அமீபோமா எனபபடும்பெரியகட்டியை உருவாக்கும்.

2. குருதிச்சோகையை ஏற்படுத்தல்:-

குருதி மயிர்த்துளைக் குழாய்கள் உடையச் செய்யப்பட்டு மலம் கழிக்கப்படும் போது கூடுதலான இரத்தம் தொடர்ச்சியாக வெளியேறுவதனால் குருதி இழப்பு ஏற்பட்டு குருதிச்சோகை ஏற்படும்.

3. அமீபா வயிற்றுளைவு:-

ஆரம்பத்தில் களைப்பு, பசியின்மை ,பின்வயிற்றுப் போக்கு, ஒருநாளில் 10-15 தரம் அல்லது கூடுதலாக மலம் திரவநிலையில் வெளியேறுவதனால் ஏற்படுகின்றது. நேரம் செல்லச்செல்ல வயிற்றுக் கடுப்புடன் காய்ச்சலுமேற்படும். ஈரலைத் தாக்குவதனால் வீக்கமடைந்து வடமேலுதரப்பகுதியில் நோவு ஏற்படுகின்றது. சீழ்க்கட்டிகளை உருவாக்குவதனால் காய்ச்சல் ஏற்படும். அதிக வியர்வை ஏற்படும்.

4. பிற பாதிப்புக்கள்:-

தாக்கப்பட்ட குருதிக்கலன்களினூடு மண்ணீரல், மூளை, ஈரல். சுவாசப்பை என்பவற்றில் தொற்றுதல் அடைந்து பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் மரணம் போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இது குடலில் காணப்படும் போது அங்கும் அதே பாதிப்பை ஏற்படுத்தும். குருதியில் காணப்படுவதினால் மூளையமுண்ணாண்பாய்பொருளிலும் அவதானிக்கப்படலாம்.

மோ. மேரின் அல்போன்ஸ்
பரியோவான் கல்லூரி
(விலங்கியல் ஆசிரியர்)

### நோய்த்தடுப்பு முறைகள்

1. நோயாளி மூலம் ஏனையோருக்குத் தொற்றல் ஏற்படுமாதலால் நோயாளிக்கு ஏற்பு சிகிச்சை அளித்தல் வேண்டும்
2. சிறந்த சுகாதாரமான பழக்க வழக்கங்களை தனி நபர் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கும் முறையான தற்சுத்தத்தையும் பொதுச் சுத்தத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அ) நோயாளியின் மலத்தின் மூலம் சிறைப்பை சூழலுக்கு கொண்டுவரப்படுவதினால் மலத்தை உரியமுறையில் அகற்ற வேண்டும். அதாவது மலசல கூடங்களில் மலம் கழித்தல் அல்லது எரிக்க வேண்டும். மலம் கழித்த பின் கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும்.

ஆ) சிறைப்பைகள் உணவு, நீர் போன்றன மூலம் மனிதன் தொற்றுதல் அடைவான். இதைத் தவிர்க்க நிலத்தில் வீழ்ந்த பழங்களை உட்கொள்ள முன் நன்கு கழுவ வேண்டும் அல்லது தாவர உணவு வகைகளுடன் மலத்தொற்றல் ஏற்படுதலைத் தடுத்தல் வேண்டும். மலம் நீர் நிலைகளை அடைவதைத் தடுக்க வேண்டும். நீரைக் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும் குடிநீர் வெள்ளப் பெருக்கிற்கு உட்படுதல் கூடாது. உணவைத் தொட முன்னர் கையை சவர்க்காரம் இட்டு கழுவுதல் வேண்டும். உணவு துப்புரவாக வைத்திருக்கப் படுதல் வேண்டும். உணவு வகைகளை மூடி வைக்கவேண்டும்.

3. வீட்டு ஈ, கரப்பான் போன்ற காவிகள் அமீபா ஒட்டுண்ணிகளை பரப்புவதால் இவைகளை வீடுகளிலிருந்து முற்றாக அகற்ற வேண்டும்.

### நோயைக் கண்டு பிடித்தல்

நோய் அறிகுறிகளை அவதானிப்பதுடன், நோயாளியின் மலத்தை நுணுக்குக்காட்டியின் கீழ் அவதானிக்கும்போது சிறைப்பைநிலை போசனைச் சிற்றுயிர் நிலை ஆகியவற்றை அவதானிக்கலாம்.

### அவதானிக்கப்பட வேண்டியவை

இவ்வொட்டுண்ணியில் இலிங்கமுறை இனப்பெருக்கம், இடைவிருந்து வழங்கி, உயிர்ப்பானகாவி, மிகையான இனப்பெருக்கம் ஆகியன இல்லை.

மேலும் ஒட்டுண்ணி வாழ்க்கை முறைக்கு ஏற்ற இசைவாக்கமாக சிறைப்பை காணப்படுவது சுருங்கத்தக்க புன்வெற்றிடம் அற்றிருப்பது மிகவும் எளிய அமைப்புடையதாக காணப்படுதல் ஆகிய அம்சங்களை குறிப்பிடலாம். இவ்வொட்டுண்ணியினால்தொற்றுதல் அடைந்த சிலர் நோய் அறிகுறிகளைக் காட்டாது காவிகளாகத் தொழிற்படுகின்றனர். அத்துடன் இவ்வொட்டுண்ணியின் கருவில் ஆறு நிறமூர்த்தங்கள் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### Entamoeba Coli

மனிதக் குடித் தொகையில் 50% மானவர்களில் குடற்குறையில் காணப்படும். ஆனால் இவை குடற்சுவர் இழையங்களை சேதப்படுத்துவதில்லை. இவை குடலில் உள்ள பற்றீரியாகழிவுகள்சமிபாடுஅடையாத உணவுப்பொருட்களைமாத்திரம் உண்டு, ஓரட்டிலி ஒட்டுண்ணி வாழ்க்கை முறையை நடாத்தும். இவற்றின் குழியவுரு அகபுறக்கலவுரு என வேறுபடுத்தமுடியாது. பெரியபுன்கரு மத்தியில் இருந்து விலகிஇருக்கும். எட்டுக்கருவுள்ள சிறைப்பை நிலையே இதன் தொற்றும் பருவமாகும்.

### Entamoeba Gingivalis

இது மனிதனின் வாய்க்குழியில் பற்களுக்கிடையில் வாழ்ந்து பற்பேத்தை எனும் சீழ்க்கட்டிகளைமுரசு தொண்டை,மூளைஆகிய பகுதிகளில் தோற்றுவிக்கும். இவற்றின்குழியவுரு அகபுறக் குழியவுரு என தெளிவாக வேறுபடுத்தலாம். இவற்றின் உணவுப் புன்வெற்றிடத்தில் அதிகளவு வெண்குழியங்களும், பற்றீரியாவும் காணப்படும்.சிறிய புன்கரு மத்தியில் காணப்படும். இவற்றில் சிறைப்பநிலை இல்லை. நேரடியாக ஒருவரின் வாயிலிருந்து இன்னொருவரின் வாய்க்கு கடத்தப்படுகின்றது.

(தொடரும்)

உற்பத்தி, விற்பனை நடவடிக்கையின் போது வழங்

வீடுகளுக்கான வரிக்கழிவைப் (Tax C redit) பெற்

முதலுரு மென்சவ்வினால் சூழப்பட்டது. இம்மென்சவ் வினூடு ஒட்சிசன் போன்றவை உள்ளெடுக்கப்படுவ

சிறைப்பை கரைக்கப்பட சிறைப்பையை விட்டு புன்னமீபாக்கள் தோன்றும்

1. நோயாளி மூலம் ஏனையோருக்குத் தொற்றல்

(தொடரும்)

# பொருளியல் / வர்த்தகம்

## சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீதான வரி

### (கூட்டிய பெறுமதி மீதான வரி / பெறுமதி சேர்வரி)

**Value Added Tax - V. A. T.**

### அறிமுகம்

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அரசிறையின் பெரும்பகுதி நேரில் வரிகள் மூலமே பெறப்படுகிறது. இலங்கையின் வரி அரசிறையில் ஐந்தில் நான்கு பங்காகவுள்ள (1994இல் 81%) நேரில்வரிகளில் மொத்தவிற்பனைவரி முதன்மை இடத்தைப் (1994இல்41% பெறுகின்றன. இலங்கையில் 1963 இல் அறிமுகம் செய்யப்பட்ட ''வியாபார மொத்த விற்பனை வரி'' (**Business Turn Over Tax - B. T. T**) 1981 இல் இருந்து ''மொத்த விற்பனை வரி'' அல்லது ''புரள்வுவரி'' (**Turn Over Tax - T. T.**) என்ற பெயரில் சில திருத்தங்களுடன் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

வரிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய இலங்கையில் மொத்த விற்பனைவரிக்குப் பதிலாக சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரியானது 1993இல் இருந்து அமுலாக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது 1993 மார்ச்சில் -ருந்தே நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென நிதியமைச்சில் ''பெறுமதிசேர்வரி அபிவிருத்திப் பிரிவு'' (**VAT Development Unit**) அமைக்கப்பட்டு முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவ்வரியினை நிர்வகிக்கும் பொறுப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விடப்படும். திணைக்களத்தல் தற்போதுள்ள ''மொத்த விற்பனைப் பிரிவு'' ''பெறுமதிசேர் வரிப்பிரிவாக'' மாற்றியமைக்கப்படும்.

எனவே தற்போது சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரியானது பொருளியலாளர்கள், கொள்கை வகுப்போர், இறைவரி அதிகாரிகள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் போன்ற பலரதும் கவனத்தை ஈர்த்துள்ள விடயமாக அமைந்துள்ளது.

இக்கட்டுரையானது சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி பற்றி

i வரைவிலக்கணம்
ii கணிப்பிடும் முறைகள்
iii அனுகூலங்கள்
iv பிரதிகூலங்கள்
v புரள்வுவரி - VAT வேறுபாடு என ஐந்து பகுதிகளாக ஆராய்கின்றது.

## I

### வரைவிலக்கணம்

''பொருட்கள், சேவைகள் நுகர்வோரைச் சென்றடைய முன்னர் உற்பத்தி, விநியோகம் என்ற பல்வேறு கட்டங்களைத் தாண்டிச் செல்கையில், சேர்க்கப்பட்ட பெறுமதிகள்மீது, குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் அறவிடப்படுவதே சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரியாகும்.''

''ஒரு உற்பத்தியாளர் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியின்போது தனது சொந்த அல்லது ஏனைய நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உள்ளீடுகளுடன் விற்பனைக்கு முன் கூட்டிக்கொண்ட பெறுமதியே சேர்க்கப்பட்ட பெறுமதியாகும்.''

சேர்க்கப்பட்ட பெறுமதி என்பது உள்ளீட்டிற்கும்

**வே. கருணாகரன் B.A.Hons, Dip.in Ed.**

வெளியீட்டிற்குமிடையிலானபெறுமதிக்குச்சமமாகும்.
வெளியீடு-உள்ளீடு=சேர்க்கப்பட்ட பெறுமதி

இங்கு உள்ளீடுகளாக மூலப்பொருட்கள், போக்குவரத்து, விளம்பரம் போன்றவை குறித்த செலவுகள் அமைகின்றன ★ அதேநேரம் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, விற்பனையின்போது பயன்படுத்தப்படும் நிலம், உழைப்பு, முதல் ஆகிய உற்பத்திக்காரணிகளுக்கு வாடகை, கூலி, வட்டி என்பன வழங்கப்படுகின்றன. ★ அதேநேரம் முதலிருப்பில் ஏற்பட்ட தேய்வுக்காக ஒதுக்கமும் செய்யப்படுகிறது. ★ அதேபோல் பொருட்கள் சேவைகள் விற்பனையின் போது குறித்தளவு இலாபமும் கிடைக்கின்றது. இவ்வகையில் ''சேர்க்கப்பட்ட பெறுமதியானது குறிப்பிட்ட உற்பத்தி, விற்பனை நடவடிக்கையின் போது வழங்கப்பட்ட வாடகை கூலிகள், வட்டி, பெற்ற இலாபம், பெறுமானத்தேய்வுக்கான ஒதுக்கம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமமாகும்.''

வெளியீடு-உள்ளீடு=சேர்க்கப்பட்ட பெறுமதி=வாடகை+கூலி+வட்டி+இலாபம்+பெ. தே. ஒதுக்கம்.

இறக்குமதி, உற்பத்தி, மொத்தவிற்பனை, சில்லறை விற்பனை என்ற வகையில் ஒவ்வொரு கட்டத்திலும் பொருட்கள் சேவைகள் கடந்து செல்லும்போது இவ்வரி அறவிடப்படுகிறது.

மூலப்பொருள்
வழங்குனர் / இறக்குமதியாளர்

உற்பத்தியாளர்

மொத்த விற்பனையாளர்
↓
சில்லறை விற்பனையாளர்
↓
நுகர்வோர்

இவ்வாறு கட்டங்கட்டமாக இவ்வரி அறவிடப்பட்டாலும் இறுதியில் வரிச்சுமையானது நுகர்வோர் செலுத்தும் விலையின் ஒருபகுதியாகி நுகர்வோர் மீதே சுமத்தப்படுகின்றது

## II

### கணிப்பிடும் முறைகள்

சேர்க்கப்பட்ட பெறுமதி வரிக் கணிப்பீடானது பின்வரும் மூன்று முறைகளில் இடம்பெறலாம்.

1 கழித்தல் முறை

இம்முறையின் கீழ் பொருட்கள், சேவைகளின் வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து உள்ளீட்டின் பெறுமதி கழிக்கப்பட்டு, குறிப்பிட்ட வீதத்தில் பெறுமதி சேர்வரி கணிப்பிடப்படும்.

வரி = (உள்ளீட்டு பெறுமதி - வெளியீட்டு பெறுமதி) × வரிவீதம்

2 கூட்டுதல் முறை

இம்முறையின்படி ஒரு நிறுவனத்தால் உற்பத்தி அல்லது விற்பனை நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளின் கொடுப்பனவுகளான வாடகை, கூலி வட்டி இலாபம் என்பவற்றின் கூட்டுத்தொகை மீது, குறித்த வீதத்தில் பெறுமதி சேர் வரி கணிப்பிடப்படும்

வரி= வாடகை+கூலி+வட்டி+இலாபம்+பெ. தே. ஒதுக்கு) · வரிவீதம்

3 பட்டியல் கழிவு முறை
**[Invoice Credit Method]**

இம் முறையின் கீழ் ஒரு நிறுவனம் வெளியீட்டுப் பெறுமதி மீது வரியினைச் செலுத்தும் அதேவேளை உள்ளீடுகளுக்கான வரிக்கழிவைப் (**Tax Credit**) பெற்றுக் கொள்ளமுடியும்.

வரி = (வெளியீட்டுபெறுமதி × வெளியீடு ÷ மீதான வரிவீதம்) —(உள்ளீட்டுப்பெறுமதி × உள்ளீடுமீதான வரிவீதம்)

இலங்கையில் இம்முறையே நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### நடைமுறைத் தத்துவங்கள்

பெறுமதிசேர்வரி தொடர்பாக இரண்டு தத்துவங்கள் பின்பற்றப்படுகின்றன.

[அ] சேரும் இடத்தத்துவம்
**Destination Principle**

இதன்படி உள்நாட்டு நுகர்வு வரிவிதிப்புக்குட்படும், எனவே இறக்குமதியும் வரிவிதிப்புக்குட்படும் அதேவேளை ஏற்றுமதிகள் வரிவிதிப்புக்குட்படுவதில்லை. இது இறுதிநுகர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். இதுவே இலங்கையில் பின்பற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[ஆ] உருவாக்கல் இடத்தத்துவம்
**[Origin Principle]**

இதன்படி உற்பத்தி செய்யப்படுமிடத்தில் வரி அறவிடப்படும். எனவே ஏற்றுமதிகள் வரிவிதிப்புக்குட்படும் அதேவேளை இறக்குமதிகள் வரிவிதிப்புக்குட்படுவதில்லை.

### வரி அடிப்படை

கோட்பாட்டுரீதியாக எல்லா பொருட்கள் சேவைகளின் நுகர்வும் வரிவிதிப்புக்குட்பட வேண்டுமாயினும், பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், நிர்வாகக் காரணங்களுக்காக சிலவகைப்பொருட்கள் சேவைகளின் நுகர்வின் மீது விலக்களிக்கப்படுகின்றன. இது 2 வகையில் நடைமுறைப்படுத்தப்படலாம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த வாரம்...

**சு. செல்வநேசன் எழுதும் க. பொ. த. உயர்தர தாவரவியல் பாடத்தில் சூழலியல் தொடர்பான பரீட்சை நோக்கு எனும் விடயம் அடுத்த வார மாணவர் அரங்கு பகுதியில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.**

# பொருளியல்

(i) விலக்களித்தல்

இதன்படி விலக்களிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளின் விற்பனையின் போது இவ்வரிவிதிப்புக்குள்ளாக மாட்டாது. விற்பனையாளர் இப்பொருளின் மீதான உள்ளீடுகளுக்குரிய வரியின் மீளளிப்புக்கு உரித்துடையவரல்ல.

(ii) பூச்சிய வரி வீதம்

இதன்படி எந்தவிதமான வரியும் செலுத்த வேண்டியதில்லை. அதேநேரம் விற்பனையாளர் தம்மால் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை மீளப்பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார். இலங்கையில் இதுவே நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வரிவீதம்

சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிவீதம் பின்வரும் 2 வகையில் ஏதாவது ஒருவகையில் அமையலாம்.

[A] தனியொரு வீதம் [Single Rate]

சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிவிதிப்பானது அனைத்துப் பொருட்கள் சேவைகள் மீதும் தனியொரு வீதமாக அமையும்போது, நிர்வாக ரீதியில் பிரச்சினைகளையும், பொருளாதார சீர்குலைவையும் ஏற்படுத்தமாட்டாது.

[B] பல்லின வீதங்கள் [Multiple Rate]

ஒப்புரவுக் குறிக்கோளை அடைந்து கொள்ளும் முகமாக இன்று பல நாடுகளில் பல்லின வீதங்களே பின்பற்றப்படுகின்றன. இத்தகைய வீதங்கள் பின்வரும் 3 வகையாக அமையலாம்.

[i] நியமவீதம் [Standard Rate]

பெருமளவு பொருட்கள் சேவைகளுக்குப் பிரயோகிக்கப்படும் வீதம் இதுவாகும்.

[ii] குறைந்த வீதம் [Reduced Rate]

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள், சேவைகள் மீது நியமவீதத்திலும் பார்க்கக் குறைந்த வீதத்தில் வரிவிதிக்கப்படும்.

[iii] உயர்வீதம் [Higher Rate]

ஆடம்பரப் பொருட்கள், சேவைகள் மீது நியம வீதத்திலும் பார்க்க உயர்ந்தவீதத்தில் வரிவிதிக்கப்படும்.

பல்லின வீதங்கள் பின்பற்றப்படுமாயின் நிர்வாகரீதியில் பிரச்சினைகளை ஏற்படுத்தி பொருளாதார சீர்குலைவு ஏற்படும்

இலங்கையில் பெறுமதி சேர்வரி பல்லினவீதமாகவே இருக்கும். ★ அது நியமவீதமாக (உத்தேசமாக 20%) பெரும்பாலான வழங்கல்கள் வரிவிதிப்புக்குட்படும். ★ ஆயினும் அத்தியாவசியப்பொருள்களுக்கு விலக்களிக்கப்படும். ★ பூச்சியவரியைக் கொண்ட வழங்கல்களின் உள்ளீடுகளுக்கு ஏற்கனவே வரி அறவிடப்பட்டிருப்பின் அதற்குரிய வரிக்கழிவை மீளப்பெறமுடியும். மூலதனச் செலவுக்கு வரிக்கழிவு வழங்கப்படும். ★ ஆடம்பரப்பொருள்களுக்கு உயர்வீதத்தில் வரிவீதம் நிர்ணயிக்கப்படலாம்.

## III

### அனுகூலங்கள்

(சிறப்பம்சங்கள் / நன்மைகள் / சாதகவிளைவுகள்)

1. திரளும் விளைவுகளைக் கொண்டிருப்பதில்லை:

புரள்வுவரி பல்வேறு நிலைகளைக் கடந்து நுகர்வோரிற்குப் பொருட்கள், சேவைகள் சென்றடையும் வரையில் ஒரே பெறுமதி மீது மீண்டும் மீண்டும் வரிவிதிப்புக்குட்படுவதால் விலை மேல் நோக்கித் திரளும் விளைவுகளைக் கொண்டிருக்கும். அதாவது வரிக்கு வரிவிதிக்கும் நிலை காணப்படும்.

ஆனால் பெறுமதி சேர்வரி ஒவ்வொரு நிலைகளிலும் பொருட்கள் சேவைகளின் கூட்டிய பெறுமதி மீது விதிக்கப்படுவதனால் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படுகின்றன.

2. குறைந்தளவான பணவீக்கம்:

புரள்வு வரியை விட குறைந்தளவான பணவீக்கத்தையே இது ஏற்படுத்தும்.

3. வரிச்சுமை குறைவு:

நுகர்வோர் பொருட்களுக்குச் செலுத்தும் இறுதி விலையானது புரள்வு வரியிலும் பார்க்கக் குறைவு. எனவே நுகர்வோர் மீதான வரிச்சுமை குறைவாகும்.

4. உயர் அரசிறைச் சேகரிப்பு:

இவ்வரி பரந்த வரி அடிப்படையுடன், நியாயபூர்வமான மிதமான வரி வீதங்களையும் கையாள்வதன் காரணமாக வரி ஏய்ப்பு குறையும்; அரசிறைச் சேகரிப்பு அதிகரிக்கும்.

★ இவ்வாறு அதிகரிப்பின் ஏனைய வரிகளைக் குறைக்க அல்லது நீக்க முடியும்

5. செயற்திறன் மிக்கது [Efficiency]

பொருளாதாரக் கொள்கைக்கும், நடைமுறையாக்கலுக்கும் ஏற்றவகையில் நிர்வாக முறையைக் கொண்டு நடத்துவதற்கான செயற்திறனை இவ்வரி வழங்குகிறது.

6. நடுநிலைத் தன்மை (Neutrality)

தனியொரு வீதத்துடன், சில விலக்களிப்புக்களையும் கொண்டிருப்பதனால் உற்பத்திமுறைக்கும், சேமிப்பு நுகர்வுக்கும் இடையில் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தாமல் நடுநிலைத் தன்மை வகிக்கின்றது.

7. ஒப்புரவுத் தன்மையானது:

வருமானவரியைப் பொறுத்தவரை சுயதொழில் செய்வோரும், ஏனைய வருமான மீட்டுவோரும் ஒன்றில் வரியிலிருந்து தப்பிவிடுவர் அல்லது குறைந்தளவு வரியையே செலுத்துகின்றனர். ஆனால் சம்பளம் உழைப்போர் உழைக்கும்போதே வரி செலுத்துவதனால் வருமானவரியிலிருந்து தப்புதல் கடினமாக உள்ளது. இதனால் இது ஒப்புரவற்றதாக அமைகின்றது.

ஆனால் பெறுமதிசேர்வரி பணத்தைச் செலவிடும்போது விதிக்கப்படுவதனாலும், நிலையான வீதத்தில் சில விலக்களிப்புக்களைக் கொண்டதனாலும், இவ்விரு குழுக்களிடையே ஒப்புரவுத் தன்மையைப் பேணமுடிகிறது.

8. சேமிப்பு, முதலீட்டைப் பாதிக்காதது.

இது நுகர்வுமீதுமட்டும் விதிக்கப்படுகின்றது. வருமானவரிபோல சேமிப்பு முதலீட்டிலிருந்துபெறும் வருமானங்கள் மீது விதிக்கப்படுவதில்லை. அத்தோடு முதலீட்டுப் பொருள்களுக்கு வரிக்கழிவும் வழங்கப்படுவதால் முதலீட்டுக்கு தூண்டுதலாக அமைகிறது.

9. உழைப்புக்கு, முயற்சிக்கு தூண்டுதல்

வருமானவரியைப் போலன்றி இது தனிப்பட்டவர்களின் உழைப்புக்கும் முயற்சிக்கும் தூண்டுதலாக அமையும்.

10. பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தாதது

★ உயர் அரசிறைச் சேகரிப்புக்கள் ★ உற்பத்தி சேமிப்பு, நுகர்வுக்கிடையில் சீர்குலைவைக் கொண்டிராமை ★ ஏற்றுமதிகளை நீக்கி இறக்குமதிகள் வரிவிதிக்குட்படுவதால் தேசிய வளங்களின் உத்தமபயன்பாடு என்பன பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும்

## IV

### பிரதிகூலங்கள்

(தீமைகள் / பாதகமான விளைவுகள்)

1. தேயும் விளைவு

விற்பனை வரியைப்போல பெறுமதி சேர்வரியின் விளைவுகளும்தேய்வானவை ஏனெனில்செல்வந்தரும், வறியவரும் ஒரே அளவு வரியினைச் செலுத்துகின்றபோதும் ஒப்பீட்டு ரீதியில் செல்வந்தரைவிட வறியவர்களின் வரிச்சுமை அதிகமானது.

2. பணவீக்கம் ஏற்படல்:

புதிதாக இவ்வரியை அறிமுகப்படுத்தும் போது உடனடியாக விலைமட்டம் அதிகரித்து பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆனால் இலங்கையில் ஏற்கனவேயுள்ள மொத்த விற்பனை வரிக்குப் பதிலாக இது கொண்டுவரப்படுவதால், இதில் திரளும் விளைவுகள் இல்லை என்பதால் பணவீக்கத் தாக்கம் இருக்காது அல்லது குறையும் எனலாம்.

3. உயர்கணக்கீட்டுச் செலவுகள்:

இவ்வரியைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு கணக்குகள், பதிவேடுகள், ஆவணங்களை உயர்தரத்தில் பேணவேண்டியிருப்பதால் செலவுகள் அதிகரித்து, இலாபம் குறையும்.

4. வரி நிர்வாகத்தில் சிக்கல்:

மொத்த விற்பனை வரி நிர்வாகம் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெறுமதி சேர்வரியை மாகாணசபையிடம் ஒப்படைக்கும்போது நிர்வாக சிக்கல் ஏற்படலாம். மாகாண சபைகள் மொத்தவிற்பனை வரி அறவிடுவதை நிறுத்துவதற்கு சட்டங்களில் திருத்தம் செய்யவேண்டிவரும்.

5. அமைப்பு ரீதியான பிரச்சினைகள்:

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சந்தைப்படுத்தப்படாத உற்பத்திகள், அன்பளிப்புக்கள், கறுப்புச்சந்தை, பூரணப்படுத்தப்படாத பதிவேடுகள், பொருளாதார வீழ்ச்சி என்பன வரிவிதிப்புக்குப் பிரச்சினையாகவே இருக்கும்.

6. வரிவீதங்கள் ஏற்படுத்தும் பிரச்சினைகள்:

பல்லின வீதங்களைக் கையாளும்போது எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தி, இம்முறையினைச் சீ குலைத்துவிடும்.

★ வர்த்தகர்கள் வேண்டுமென்றே குறைந்த வரி வீதங்களைக் கொண்ட பொருள் தொகுதியாக உயர்வீதங்கொண்டபொருட்களைக்காட்ட முயற்சிப்பர்.

★ இவ்வாறான தேவையற்ற பிரச்சினைகளில் அதிகாரிகள் தமது நேரத்தை விரயமாக்க நேரிடும்.

## V வேறுபாடு

| புரள்வுவரி | பெறுமதிசேர்வரி |
|---|---|
| 1. பொருள்கள் சேவையின் விற்பனைப் பெறுமதி மீது விதிக்கப்படுவது. ★ வருடம் 1 இலட்சம் ரூபா / காலாண்டு 25,000 ரூபாவுக்கு மேலான விற்பனை மீது விதிக்கப்படுகிறது. | பொருள்கள் சேவையின் கூட்டிய பெறுமதி மீது விதிக்கப்படுவது. ★ ஒவ்வொரு உற்பத்தி விற்பனைக்கட்டத்திலும் விதிக்கப்படுகிறது. |
| **பொருளாதார விளைவுகளில்** | |
| 2. திரளும் விளைவைக் கொண்டது ★ ஒரேபெறுமதிக்கு மீண்டும் மீண்டும் வரி விதிக்கப்படுகிறது. ★ வரிக்குவரி விதிக்கப்படுகிறது. | திரளும் விளைவைக் கொண்டதல்ல. ★ ஒரே பெறுமதிக்கு மீண்டும் வரி விதிக்கப்படுவதில்லை. ★ வரிக்குவரி விதிக்கப்படுவதில்லை. |
| 3. உயர்பணவீக்கத்தை ஏற்படுத்தும் | குறைவான பணவீக்கத்தையே ஏற்படுத்தும். |
| 4. நுகர்வோனது வரிச்சுமை அதிகம் | நுகர்வோன் வரிச்சுமை குறைவு |
| 5. வரிவருமானம் குறைவு | வரிவருமானம் அதிகம் |
| 6. வரி ஏய்ப்பு செய்யப்படலாம் | வரிஏய்ப்பைத் தவிர்க்க உதவும் |
| 7. செயற்திறனற்றது | செயற்திறன் வாய்ந்தது |
| 8. நடுநிலைத்தன்மை அற்றது | நடுநிலைத் தன்மையானது |
| 9. சேவைகள் துறை பாதிப்பு | சேவைகள்துறை அபிவிருத்தி |

### முடிவுரை

இலங்கை உட்பட வளர்முக நாடுகள் பலவும் ''வரிவிதிப்பின் மூலமாக அபிவிருத்தியடைதல்'' என்பதனைத் தமது அரசிறைக் கொள்கையின் பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பெறுமதி சேர்வரி பல அனுகூலங்களைக் கொண்டுள்ளது. அதே நேரம் ஒரு சில பிரதி கூலங்கள், இடர்பாடுகளையும் அது எதிர்கொள்ளவேண்டியுள்ளது. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு நன்கு திட்டமிட்டு பெறுமதிசேர்வரியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை விரைவுபடுத்தலாம்.

வினா:

1993 பொருளியல் II

(i) புரள்வுவரி, சேர்க்கப்பட்டபெறுமதியின் மீதான வரி என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(ii) மேலே குறிப்பிட்டுள்ள இரு வரிகளினதும் பொருளாதார விளைவுகளில் நீர்காணும் வேறுபாடுகள் யாவை?

---

# கணக்கியல் A/L

சென்ற வாரத் தொடர்ச்சி

அலகு 5

(ஈ) வரி விதி முறைகள்.

(2) சொத்துக்களும் அவற்றின்மதிப்பீட்டுமுறைகளும்:-

(அ) அபிவிருத்திக்காக வைத்திருக்கப்படும் காணியும் அபிவிருத்தி செலவுகளும்.

(ஆ) பெறுமான மிடத்தக்க சொத்துக்களும்; அவற்றின் பெறுமதித் தேய்வுகளும்.

(இ) இருப்புத்தொக்குகள், நடைமுறைவேலை.

யிலேயே கணக்குகள் பேணப்படுகின்றன. அவை குறுங்காலத்தில் ஒழிந்து போகும் எனக்கருதுவதில்லை. நிறுவனங்கள் தொடர்ந்தியங்கும் எனக்கருதுவதாலும், சொத்துக்கள் விற்பனை செய்வதற்காக வைத்திருக்கப்படுவதில்லை எனும் அடிப்படையிலும் சொத்துக்களின் சந்தைப் பெறுமதிகளைக் கணக்குகளில் காட்டுவதில்லை. ஆனால், நிறுவனம் கலைக்கப்படவுள்ளது என்பது தெரியவரின் சொத்துக்கள்

காட்டப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக (Prudence: To ensure that profit is not shown as being too high; or assets shown at too high a value) பாதுகாப்பு எண்ணக்கரு அமைகின்றது. ஆகையால்; கணக்கீட்டுத் திகதியில் சாத்தியமான எல்லா நட்டங்களும் கணக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால்; சாத்தியமான வருமானங்கள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதனால்;

## அலகு 5

இலங்கைக் கணக்கியல் நியமம் - மூன்று
**(SLAS-3)**

**Sri Lanka Accounting Standards -3**

5.0 அறிமுகம்:-

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 3 ''கணக்கியல் கொளகைகள்'' பற்றி விபரிக்கின்றது. க பொ. த. உயர்தர கணக்கியல் வினாத்தாள்களில் கணக்கீட்டுக் கொள்கைகளும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களும் வருடாந்தம் தனி வினாவாகக் கேட்கப் படுவதால் உயர்தர மாணவர்களுக்கு பயன்தரும் வகையில் இக் கட்டுரை அமைகின்றது.

### 5.1 கணக்கியல் கொள்கைகள் **Accounting Policies**

நிறுவனங்களின் முகாமையானது தமது உள்ளக **(internal)** முகாமைத்துவத் தேவைகளுக்காக எவ்வகையான வடிவிலும் தமது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியும். ஆனால் நிதிக்கூற்றுக்களானவை பங்குதாரர், கடன் கொடுநர்கள். ஊழியர்கள்,பொது மக்கள் என்போருக்குச் சமர்ப்பிக்கப்படும் போது அவை 'இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு' அமைவாகத் தயாரிக்கப்பட்டவையாக அமைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் இங்கு, நிதிக் கூற்றுக்கள் என்பது, வருமானக் கூற்றுக்களான வியாபார இலாபநட்டக் கணக்குகளையும் ஐந்தொகையினையும், ஏனைய நிதி நிலைமைக் கூற்றுக்களையும் உள்ளடக்குகின்றது.

இவ்வகையில் கணக்கீட்டுக் கொள்கைகள் என்றால், ''நிறுவனத்தின் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன முகாமையினால் நியாயமானது அல்லது மிகப் பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்படும் கணக்கீட்டுவிதிகள், நடைமுறைகள்'' என்பவையாகும்.

#### 5.1.1 கணக்கியல் கொள்கைகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியதன் அவசியம்:-

(அ) நிதிக் கூற்றுக்களில் விளங்கிக் கொள்ளும் தன்மையை அதிகரித்தல்.

(ஆ) ஒத்த நிறுவனங்களுடனும்; கடந்த நிதி ஆண்டுகளுடனும் 'ஒப்பிடக்கூடிய தன்மையை' ஏற்படுத்துதல்.

(இ) நம்பிக்கைத் தன்மையை ஏற்படுத்துதல்.

### 5.2 கணக்கியல் கொள்கைகளின் வகைகள் **Kinds of Accounting Policies**

வெளிப்படுத்தப்பட வேண்டிய கணக்கியல் கொள்கைகளை வருமாறு நான்காக வகைப் படுத்தலாம்.

(1) பொதுவானவை:-
- (அ) முழுமையான மதிப்பீட்டுக் கொள்கைகள்
- )ஆ) நீண்ட தவணை ஒப்பந்தங்கள்.
- (இ) அரச மானியங்களும் உதவிகளும்.

- (இ) இருப்புத்தொக்குகள், நடைமுறைவேலை.
- (ஈ) முதலீடுகள், கட்டுப்படுத்தும் முதலீடுகள், ஏனைய முதலீடுகள்.

(3) பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்:-
- (அ) விதிப்பனவுகளும்; நிகழத்தக்க பொறுப்புக்களும்.
- (ஆ) ஓய்வூதியத் திட்டங்களும், இளைப்பாற்றுத் திட்டங்களும், வேலைமுடிவு நன்மைகளும்
- (இ) சேவை நிபந்தனைகள் மீதான பொறுப்புக்கள்

(4) இலாபங்களும் நட்டங்களும்:-
- (அ) வருமான மதிப்பீட்டு முறை
- (ஆ) பராமரிப்பு, திருத்தம், அபிவிருத்தி
- (இ) சொத்து விற்பனை இலாபநட்டங்கள்
- (ஈ) குத்தகை, வாடகைக் கொள்வனவு, தவணைக் கொடுக்கல்வாங்கல்கள், அவை தொடர்பான வட்டிகள்.

---

**ச. K. பிரபாகரன் B. B. A(Spl)**
உடுவில் மகளிர் கல்லூரி

---

### 5.3 அடிப்படைக் கணக்கீட்டு எடுகோள்கள் **Basic Accounting Assumptions**

நிதிக் கூற்றுகளின் தயாரிப்பின் போது பின்பற்றப்படும் அடிப்படைக் கணக்கீட்டு எடுகோள்கள் அல்லது கருதுகோள்கள் வருமாறு:

1) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - **Going Concern**
2) கொள்கை மாறாமை - **Consistency**
3) அட்டுறு - **Accrual**
4) முன்னெச்சரிக்கை - **Prudence**

### 5:4 கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:-

கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தலிலும் பயன்படுத்துவதிலும் நிறுவனங்களின்முகாமை பின்பற்ற வேண்டிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

1) முன்னெச்சரிக்கை - **Prudence**
2) தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியம் (அமைப்பின் மேலானசாரம்) - **Substance Over Form**
3) பொருண்மை - **Materiality**

### 5.5 எடுகோள்கள்/எண்ணக் கருக்களின் விளக்கங்கள்:-

#### (1) தொடர்ந்தியங்கும்/செயற்படும் அமைப்பு:- **Going Concern**

இவ் எண்ணக் கருவின்படி ஒரு நிறுவனத்தின் ஆயுட்காலம் மிக நீண்டதாகக் காணப்படுகின்றது. அதாவது, நிறுவனங்கள் வரையறையற்ற காலப்பகுதிக்கு தொடர்ச்சியாக இயங்கும் என்ற அடிப்படை

ளில் காட்டுவதில்லை. ஆனால், நிறுவனம் கலைக்கப் படவுள்ளது என்பது தெரியவரின் சொத்துக்கள் சந்தைப் பெறுமதியிலேயே கணக்குகளில் காட்டப்பட வேண்டி ஏற்படும். ஏனெனில்; இந்நிலையில் செயற்படும் அமைப்பு எண்ணக்கரு பின்பற்றப்பட மாட்டாது என்பதால் கிரயக் கோட்பாட்டினை அனுசரிக்க முடியாது.

**(If Business were not Assumed to be Going Concerns, The Cost Concept Could not be Used)**

#### (2) கொள்கை மாறாமை/இசைவுத்தன்மை பழமை பேணல் **Consistency**

ஒரு நிதியாண்டில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டு முறைகள், ஒழுங்குகள். கொள்கைகளையே நிறுவனங்கள் தொடர்ந்து வரும் நிதியாண்டுகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பது கொள்கை மாறாமையாகும். இவ்வாறு செய்வதன் மூலமே சரியான இலாபநட்டங்களைக் கணிப்பிடவும். நிதி நிலைமைகளை கடந்த நிதியாண்டுகளுடனும், ஒத்த நிறுவனங்களுடனும் ஒப்பிடக்கூடிய தன்மை ஏற்படும். அடிக்கடி கணக்கீட்டு நடைமுறைகள் மாற்றப்படுமெனின் அதனால் தவறான இலாபநட்டங்கள் கணிக்கப்படும். **(Constantly changing the methods would lead to misleading profits being calculated from the accounting records)** ஆகையால். கணக்கீட்டு நடைமுறைகளைத் தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுவனங்கள் மாற்ற வேண்டியிருப்பின், போதியளவு ஆழமான பரிசோதனைகளை மேற்கொண்டபின் மாற்றி அமைக்கலாம். அவ்வாறு மாற்றியமைக்கும் போது ஏற்படும் மாற்றங்களையும், அதன் விளைவுகளையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.

உதாரணமாக; இருப்பு மதிப்பீட்டுக்கு FIFO முறையைப் பின்பற்றி வரும் நிறுவனம் தொடர்ந்து அம்முறையையே கைக்கொள்ள வேண்டும்.

#### (3) அட்டுறு/சேர்வுறல் - **Accrual**

வருமானங்களுக்கும் செலவினங்களுக்குமிடையிலான வேறுபாடாக தேறிய இலாபம் அமையும் எனும் கருத்தைக் கூறுவதே அட்டுறு எண்ணக்கரு ஆகும். **(The accrual concept says that net profit is the difference between revenues and expenses)** ஆகையால்;சரியான முறையில் தேறிய இலாபத்தைக் கணிப்பிட குறித்த நிதியாண்டுப் பகுதியில் உண்மையாக உழைக்கப்பட்ட வருமானங்களையும்; ஏற்பட்ட செலவினங்களையும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். அதாவது; காசாகப் பெறப்பட்ட வருமானங்கள்; காசாகச் செலுத்திய செலவினங்கள் மட்டுமல்லாது வருமதிகளையும்; நிலுவைகளையும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும் என்பதே அட்டுறு ஆகும்,

#### (4) பாதுகாப்பு/முன்னெச்சரிக்கை/முன்மதி/கூர்ந்தமதி/செயலறிவு **Prudence**

உள்ளதைவிட இலாபங்கள் கூட்டிக் காட்டப்படவில்லை அல்லது சொத்துக்களின் பெறுமதி கூட்டிக்

படும். ஆனால்; சாத்தியமான வருமானங்கள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதனால்; போலியான ஓர் நல்ல நிலைமையை உண்டாக்கும் தன்மை தவிர்க்கப்படும். இதனைக் கையாள்வதன் மூலம் தேவையற்ற இலாபக் கணக்குகள் உருவாகுவதைத் தவிர்க்க முடிவதுடன் எதிர்காலத்தில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்படும் நட்டங்களுக்கு ஒதுக்கல் நிகழும். (தொடரும்)

---

## தேவையற்ற விதிகள் நீக்க அரசு முயற்சி

(கொழும்பு)

தேவையற்ற அவசரகாலச்சட்ட விதிகளை நீக்கி விடும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இதேசமயம் அமுலில் இருக்க வேண்டிய அவசரகாலச் சட்ட விதிகளை இனங்காணுமாறு சகல அமைச்சு செயலர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜயதாஸ அறிவித்துள்ளார்.

இருவார காலத்திற்குள் தமது சிபார்சுகளுக்கான காரணங்களை தெரிவிக்க வேண்டுமென்றும் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். இவர்கள் தெரிவிக்கும் சிபார்சுகள் திரட்டப்பட்டு சட்டமா அதிபர் திலக் மாரப்பனவிடம் ஒப்படைக்க முடியும். அவர் தேவையற்ற அவசர காலச் சட்ட விதிகளை நீக்கி விடுவதற்கு சிபார்சு செய்வார்.

## குண்டுடன் சிப்பாய்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் அருகே 3 இராணுவச் சிப்பாய்கள் கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைக்குண்டுகளுடன் காணப்பட்டதை அவதானித்த அன்றிரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிசார் இவர்களைக் கைது செய்தனர்.

விசாரணைகளிலிருந்து இவர்கள் பனாகொட இராணுவ முகாமை சேர்ந்தவர்கள் எனவும் இருவர் குண்டு அகற்றும் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பீரங்கிப் படையை சேர்ந்தவர்எனவும் தெரிய வந்துள்ளது. தாம் வர்த்தக வலயத்தில் பணிபுரியும் பெண் ஒருவரை சந்திக்கவே அங்கு வந்ததாக இப்படையினர் பொலிசாருக்கு கூறியுள்ளனர்.

## சிந்தனைக்கு..

கீழே கிடப்பவன் விழ்வது
பற்றி அஞ்ச வேண்டியதில்லை.
- ஜோன் பன்யன்,

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 27-06-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# டி.பியின் நோக்கம்

"நாட்டின் நிலைமையை கவனமாக ஆராய்ந்த பின்னரே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்த தீர்மானித்தேன்'' என டி.பி.விஜேதுங்கா மக்களுக்கென ஆற்றிய உரையில் தெரிவித்திருப்பினும் அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தொன்றல்ல. இதில் டி.பி. விஜேதுங்கா நாட்டின் நலன் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியின் நலனையும் கூடக் கருத்திற் கொள்ளவில்லை. தனது நலனை மட்டுமே கருத்திற் கொண்டு முடிவை எடுத்தார் என்பதே தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் விமர்சகர்களின் வெளிப்பாடாகும்.

தற்பொழுது வெளி வந்து கொண்டிருக்கும் பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான விமர்சனங்கள் யாவும் டி.பி. விஜேதுங்காவின் இம்முடிவானது கட்சியை வெகுவாகப் பாதிக்கும் என்றே தெரிவிக்கின்றன. இது கட்சிக்கு சாதகமான நிலையைத்தோற்றுவிக்கும் என எவருமே தெரிவிப்பதாக இல்லை.

இவ்விமர்சனங்கள் தனியாக வெளியில் இருந்து மட்டும் வரவில்லை, கட்சிக்குள் இருந்தும் எழுந்துள்ளன. பாராளுமன்றம் கலைப்பதாக பேச்சு அடிபடத் தொடங்கியதும் டி.பி. விஜேதுங்காவைச் சந்தித்த ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இத்திட்டத்தைக் கைவிடுமாறு கோரினர். ஆனால், டி.பி. விஜேதுங்கா அதற்குச் செவி சாய்க்கவில்லை. தனது திட்டத்தின்படி பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

டி.பி. விஜேதுங்காவின் இம்முடிவானது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டி ஒரு ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், இம்முடிவானது ஓர் அரசியல் விபத்து என்றும் இதன் விளைவுகள் ஜனாதிபதியினால் கூடச் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவிற்குமோசமானதாக அமையும் எனவும் கூறினார்.,

பொதுவான அரசியல் விமர்சகர்களினாலும், ஐ.தே.கவிலுள்ள பலரினாலும் கூட மோசமான முடிவு என வர்ணிக்கப்படும் இந்தீர்மானத்தை டி.பி. விஜேதுங்கா ஏன் எடுத்தார்? எதற்காக எடுத்தார்? என்பதே

## கொழும்பு பங்கு சந்தை தொடர்ந்தும் மந்த நிலை

முன்னைய வாரத்தைப் போன்றே கடந்த வாரமும் கொழும்புபங்குச்சந்தைநிலை வரம் மந்தநிலையிலேயே இருந்தது. சந்தை மிகப்பெரிய ஏற்ற இறக்கங்கள் ஏதுமின்றி பொதுவான வீழ்ச்சிப் போக்கிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.

அரசியல் உறுதியற்ற நிலையே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

## சுதந்திர வர்த்தக வலயம் இந்தியா அக்கறை

திருகோணமலையில் துறைமுகப்பகுதியில் சுமார் முந்நூறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ள சுதந்திர வர்த்தக வலயம் தொடர்டாக இந்திய அரசு அக்கறையுடன் இருப்பதாக கூறப்படுகிறது.

இச் சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பாக முன்னர் அறிவிப்புகள் வெளியிடப்பட்டபோதிலும் போதிய முதலீட்டாளர்கள் அங்கு தமது முதலீடுகளை செய்ய முன்வராமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் மகன் மோசடி கார் சாரதி கைது

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் காலிங்க ஒபயவன்சவின் மகன் ஒருவர் அவரது கார்ச் சாரதியிடமிருந்து முப்பதாயிரம் ரூபா பணத்தைப் பெற்றிருந்தார். பணத்தை மீளப் பெறச் சென்றபோதே பாராளுமன்ற உறுப்பினரின் நிவால்வர் காணாமற்போனசம்பவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளார் இவ்வாறு நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஜோசப்சார்ல்ஸ்தெரிவித்தார்

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட கார்ச் சாரதியான ஜி.டி. பாலித மீண்டும் பொலிசாரால் கைது செய்யப்பட்டது தொடர்பான புகார் அண்மையில் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டபோதே சட்டத்தரணி ஜோசப் சார்ல்ஸ் இதனைத் தெரிவித்தார். அத்துடன் முறைப்பாட்டாளரின் மகன் பணம் பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக காசோலை ஒன்றையும் காட்டினார். பிணையில் விடப்பட்டுள்ள ஒருவரை நீதிமன்ற அனுமதி இல்லாமல் குற்றப் புலனாய்வு பொலிசார் கைது செய்தமை அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்பதையும் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார். நீதிவானும் அதனை ஏற்றுக் கொண்டார்.

## ஹெய்ட்டி எச்சரிப்பு

(போர்ட் ஒப் பிரின்ஸ்)

ஹெய்ட்டியின் மீது அமெரிக்கப் படையெடுப்பு நடந்தால் கெரில்லா யுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக ஹெய்ட்டியின் இராணுவ ஆட்சி எச்சரித்துள்ளது.

## கருத்தரங்கு

'பெண்களும் தலைமையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு மகளிர் அபிவிருத்தி நிலைய ஏற்பாட்டில் இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு வரணி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# ஒருமாத காலத்தில் 5 ராணுவ நடவடிக்கைகள்

(கொழும்பு)

கடந்த ஒருமாத காலத்தில் படையினர் வடக்கிலும், கிழக்கிலும் 5 இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சுரவீர, சுலிசுலங், கிறீன் சேர்ச்-2, பம்பரசக்கர ஆகிய பெயர்களில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பம்பரசக்கர நடவடிக்கை கிழக்கில் தொப்பிகல, அங்கொடவிலு, கும்புறுபிட்டி ஆகிய பகுதிகளில் இடம் பெற்றன.

வடக்கில் படையினர் 8சுற்றிவளைப்புகள், 2 முற்றுகைகள், 2 தேடி அழிப்புகள் ஆகியவற்றை மேற் கொண்டதாகவும் கிழக்கில் 104 சுற்றிவளைப்புகள், 4 தேடி அழிப்பு நடவடிக்கைகள், 4 முற்றுகைகளும் நடத்தப்பட்டன எனவும் அமைச்சு கூறியுள்ளது. இதில் 9 பொலிசாரும் 13 இராணுவத்தினரும் பலியானதாகவும் அமைச்சு கூறுகிறது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 06 - 27**
**திங்கள் இரவு**

08. 01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - ஒப்பறேஷன் பலவேகய இரண்டு இராணுவ நடவடிக்கை நினைவாக சிறப்பு நிகழ்ச்சி

**1994. 06. 28**
**செவ்வாய் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.

## 20 பேர் கொண்டதாக அமைச்சரவை இருக்கும்

### சுதந்திரக்கட்சிஎம்.பி. கூறுகிறார்

கொழும்பு)

நாம் ஆட்சிக்கு வந்தால் நூற்றுக் கணக்கான அமைச்சர்களை நியமிக்காது 20 பேர் கொண்ட அமைச்சரவையை அமைப்போம் என எதிர்க்கட்சி கொறடாவான ரிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார்.

பலப்பிட்டிய பகுதியில் சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், மேலும் தெரிவிக்கையில், தமிழ் - சிங்கள மக்கள் ஐக்கியமாக வாழக்கூடிய நிலையை எமது அரசு பதவிக்கு வந்தவுடன் முதற்பணியாக மேற்கொள்ளும். முன்னைய 'கியூ' முறை நீக்கப்படும் எந்தப் பொருட்களும் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்வோம்.

அரச முக்கியஸ்தர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை கூறப்படும் ஊழல் இலஞ்ச புகார்களை விசாரணை செய்வதற்காக விசேடஆணைக்குழுவொன்றை நியமிப்போம்.

## வடபகுதி வாசியிடம் ஆட்டோ சாரதி கொள்ளை

(தென்மராட்சி)

கொழும்பில் தமிழர் ஒருவரிடம் ஆட்டோ சாரதிஒருவர் பொருளகளை அபகரித்துச் சென்றுள்ள சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பு தெகிவளை பகுதியில் மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் 50,000 ரூபா பெறுமதியான பொருளை வாங்கி ஒரு ஆட்டோவை வாடகைக்கு பிடித்து சென்ற போது இடைநடுவில் ஆட்டோ ஓட்டுநர் எரிபொருள் இல்லாமையினால் ஆட்டோ இயங்கமாட்டாமல் நின்று விட்டது என்று கூறி இவரை எரிபொருளை அருகில் உள்ள பெற்றோல் நிலையத்தில் வாங்கி வருமாறு கூறினார். இவர் எரிபொருளை வாங்கி திரும்பி வந்து பார்த்தால் ஆட்டோ மாயமாக மறைந்ததை கண்டு திகைத்தார். (86)

## நினைவு பேருரை

பேராசிரியர் சோ.செல்வநாயகம் நினைவுப் பேருரை நாளை செவ்வாய் மாலை 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்,

தெ. ஆபிரிக்காவில் கொல்லப்பட்ட

# பிரிட்டிஷ் வர்த்தகர் குறித்த விசாரணைகள் மீள ஆரம்பம்

## ருவாண்டாவிற்கு செனிகல் படைகள்

(கிகாலி)

ருவாண்டாவின் மேற்கு பகுதியில் நிலை கொண்டுள்ள பிரெஞ்சுபடைகளுக்கு உதவி வடமேற்கு பகுதியில் செனிகல் படையினர் தங்கியுள்ள அதேசமயம் பிரெஞ்சுபடையினர் எல்லை அருகே உள்ள

துங்கா ஏன் எடுத்தார்? எதற்காக எடுத்தார்? என்பதே இன்று பலர் முன்னுள்ள கேள்வியாகும். கடந்த தென் மாகாணசபைத் தேர்தலே ஐ.தே.க. பெரும் நெருக்கடியில் உள்ளது என்பதை வெளிக்காட்டியுள்ள போதும் டி.பி. எடுத்த முடிவு பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது,

கடந்த ஓரிரு மாதங்களுக்குள் டி.பி. விஜேதுங்கா பெருமளவு வேலை வாய்ப்பு அறிவிப்புக்களையும், சலுகை அறிவிப்புக்களையும் வெளியிட்டு வருகின்றார். ஆனால் பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடியில் உள்ள அரசாங்கத்தால் அவற்றை நிறைவேற்ற முடியுமா? என்பது ஒருபுறம் இருக்க, அவை நிறைவேற்றப்படினும் அவற்றால் பெரும் தேர்தல் ஆதாயம் கிட்டுமா என்பது சந்தேகமே ஏனெனில், ஏற்கனவே ஐ.தே.கவின் ஆட்சி மீது மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டனர்

இந்நிலையில் வேலைவாய்ப்புக்களும், சலுகை அறிவிப்புக்களும் தேர்தலில் வெற்றியைத் தேடித்தரும் என்ற நம்பிக்கையில் தேர்தல் களத்தில் இறங்குவது நன்மைபயக்கக் கூடியது அல்ல. இதேசமயம் இலங்கையில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள இனப்பிரச்சினை தொடர்பாகவும் டி.பி. விஜேதுங்கா முடிவு எதையும் அறிவிக்கவில்லை. ஆகையினால் சிறுபான்மையினரின் வாக்குக்களைப்பெறுவதிலும் அவருக்குச் சிக்கல்கள் நிறையவே உள்ளன.

இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து டி.பி. விஜேதுங்கா தேர்தலுக்கு திகதி அறிவித்துள்ளமையானது அவர் கட்சிக்குள் எதிர்நோக்கும் நெருக்கடியையே காட்டுகின்றது. கட்சியின் பல மட்டங்களிலும் அவருக்குள்ள எதிர்ப்பானது அவரின் செயற்பாடுகள் பலவற்றிற்கு முட்டுக்கட்டையாகவும் அமைந்துள்ளன. இந்நெருக்கடியை சுதந்திரக்கட்சியில் இருந்து பிரிந்து வருபவர்களுக்கு உடனடியாக ஐ.தே.க. சார்பில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதியும் பிரதேச அமைப்பாளர் பதவியும், வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதில் இருந்தே புரிந்து கொண்டிருக்க முடியும்.

இந்த வகையில் டி.பி. விஜேதுங்காவின் முடிவானது கட்சிக்குள் அவர் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியின் விளைவே ஆகும். இந்நெருக்கடியைத்தீர்க்க அவர் கைக்கொண்டுள்ள நடவடிக்கையே பாராளுமன்ற கலைப்பாகும். இதன் மூலம் ஐ.தே.கட்சி தேர்தலில் படுதோல்வி அடையும் நிலை கூட வரலாம். ஆனால் டி.பி. விஜேதுங்கா இத்தோல்வியை விட கட்சிக்குள் தனது பிடியை இறுக்கும் நடவடிக்கையிலேயே தீவிரகவனமாக உள்ளார். ஆனால் கட்சி தேர்தலில் தோல்வியைச் சந்திக்குமானால் கட்சிக்குள் தனக்கென டி.பி. விஜேதுங்கா ஓர் அணியை வளர்ப்பதில் கூட அர்த்தமில்லாது போகலாம்.

# விசாரணைகள் மீள ஆரம்பம்

## கொலையுடன் மொசாட் தொடர்பு?

(ஜொகனஸ்பேர்க்)

ஜொகனஸ்பேர்க்கில் மூன்று வருடங்களின் முன் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டிஷ் வர்த்தகர் ஒருவரின் கொலை குறித்து தென்னாபிரிக்க பொலிசார் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கொல்லப்பட்ட இவ்வர்த்தகர் அணு ஆயுத தயாரிப்பிற்கு வேண்டிய இரசாயனப் பொருட்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு விற்பனை செய்து வந்தவர் என புதிய விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரிட்டிஷ் இரசாயன நிறுவனம் ஒன்றின் முகாமையாளராக இருந்த இவர் 1991 நவம்பரில் கொடூரமாக கொல்லப்பட்டவேளை இது நிறவெறிப் போராட்டத்தின் விளைவே எனக் கருதப்பட்டு விசாரணைகள் முடக்கப்பட்டன. தற்போது மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மூலம் இவர் சம்பவதினத்திற்கு முதல் நாள் தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்ததையடுத்து வீட்டை விட்டு வெளியேறியது தெரிய வந்துள்ளது. மறுநாள் இவர் தனது ஆடம்பர காரினுள் கால்களும் கைகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இக் கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் பொலிஸ் அதிகாரி கருத்து தெரிவிக்கையில் இவர் வெளிநாட்டு அரசுகளுடன் தொடர்பு கொண்டுள்ளார் என தெரியவருகிறது. இதுவே கொலைக்கும் காரணமாயிருக்கலாம் என்றார். இதே சமயம் இவரின் கொலைக்கும் மொசாட்டுக்கும் தொடர்பிருப்பதாக வெளியாகும் செய்திகளை தென்னாபிரிக்காவிலுள்ள இஸ்ரேலின் தூதுவர் மறுத்துள்ளார். எனினும் தமது விசாரணைகள் இப்போது வெளிநாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க பொலிசார் கூறுகின்றனர்.

# தென்யேமனுக்கு எதிரான போரை நிறுத்த வடயேமன் முடிவு

(ஏடன்)

தென்யேமனுக்கு எதிராக நடத்திவரும் போரை நிறுத்துவது என வடயேமன் நேற்று அறிவித்தது. வடயேமனின் இந்த அறிவிப்பு அந்நாட்டு தொலைக்காட்சி மூலம் விடுக்கப்பட்டது.

ஆனால் ஏடன் மீது வடயேமன் தொடர்ந்து எறிகணை தாக்குதல் நடத்துவதாக தென்யேமன் குற்றஞ்சாட்டியுள்ளது. முன்னரும் இவ்வாறு வடயேமன் ஐந்து முறை யுத்த நிறுத்தம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடயேமன் தென்யேமன் மீது கடந்த சில தினங்களாக தாக்குதலை அதிகரித்திருந்தது. தென்யேமனையும் மேற்கிலுள்ள எண்ணை சுத்திகரிப்பு ஆலையையும் இணைக்கும் பாதையை வடயேமனியர்கள் துண்டித்துள்ளதால் எண்ணை விநியோகம் மற்றும் நீர், உணவு, மின் பற்றாக்குறையை தென்யேமனியர் எதிர்கொள்வதாகதெரிவிக்கப்படுகிறது.

# 80 போதை கடத்தல்காரருக்கு சீனாவில் மரணதண்டனை

(பீக்கிங்)

நேற்றைய உலக போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்தையொட்டி பல போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சீனா பகிரங்க மரண தண்டனை நிறைவேற்றியதுடன் கைப்பற்றிய போதைப்பொருட்களை மக்கள் முன்புவைத்து தீயிட்டது.

80 க்கும் அதிகமானோர் நேற்று மரண தண்டனைக்குள்ளாகினர். வருடாந்தம் நடைபெறும் இந்நிகழ்வு பெருமளவு மக்கள் கூடக்கூடிய விளையாட்டரங்குகளில்நடைபெற்றன. மலைபோல் குவிக்கப்பட்டிருந்த போதைப்பொருட்களை படையினர் இவ்வரங்குகளில் வைத்து கொளுத்தியதுடன் போதைக் கடத்தற் காரர்களுக்கு பகிரங்க மரண தண்டனைகளையும் நிறைவேற்றினர்.

பிரெஞ்சுபடைகளுக்கு உதவியாக மேலும் 300 பேர் கொண்ட செனிகல் நாட்டுப் படையினர் ருவாண்டா வந்து சேர்ந்துள்ளனர்.

...னர் எல்லை அருகே உள்ள டுட்சி சிறுபான்மையினர் தங்கியுள்ளபாரிய அகதிமுகாமிற்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

**உலகக்கிண்ண உதைபந்தாட்டம்**

# ஆஜன்டீனா அணியால் நைஜீரியா தோற்கடிப்பு

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் ஆஜன்டீனா நைஜீரியாவை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. சவுதி அரேபியா மொரோக்கோவை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

பெல்ஜியம் - நெதர்லாந்து அணிகளிடையிலான போட்டியில் பெல்ஜியம் நெதர்லாந்தை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

தற்போது பிறேசில் ஆர்ஜன்டீனா என்பன இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

# அரபாத் சுயாட்சிபகுதிக்கு வருவதற்கு எதிர்ப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனக் கைதிகள் தாம் விடுவிக்கப்படும் வரை அரபாத் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியினுள் வரக்கூடாது எனக் கோரி உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

கைதிகளை விடுதலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பாலஸ்தீனர்கள் அரபாத்திற்கு எழுதிய கடிதத்தில் காஸா ஜெரிக்கோ சுயாட்சிப் பகுதிக்கு வரும் திட்டத்தை ஒத்திவைக்குமாறு கேட்டுள்ளனர். சகல கைதிகளும் விடுவிக்கப்படும் வரையில் அங்கு விஜயம் செய்ய வேண்டாம் என அவர்கள் கேட்டுள்ளனர்.

அரபாத் இம்மாத இறுதியில் அங்கு செல்லவிருந்தார். கைதிகள் விடுவிக்கப்பட முன் வந்தால் அவருக்கு கறுப்புக் கொடி காட்டப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி, பிரதமர் படைகள் ஆப்கானில் கடும் மோதல்

(காபூல்)

ஆப்கான் ஜனாதிபதி ரபானியின் படையினருக்கும் பிரதமர் ஹெக்மத்யார் படையினருக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன. ஜனாதிபதிக்கு விசுவாசமான படையினர் ஹெக்மத்யார் படை நிலைகள் மீது தரை மற்றும் வான் தாக்குதலை நடத்தியதையடுத்து கடும் போர் வெடித்துள்ளது.

இருதரப்பும் கடும் எறிகணை தாக்குதலை நடத்தி வருகின்றனர். இன்னும் மூன்றுதினங்களில் ஜனாதிபதி ரபானி இராஜினாமா செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்த்தரப்புத் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருவதையடுத்தே தாக்குதலை ஆரம்பித்ததாக ஜனாதிபதி ரபானிக்கு ஆதரவான படையினர் கூறியுள்ளனர்.

ஆணே உனக்கு என்ன விலையா!
அவனியில் நீ உயிரற்ற சிலையா!

# பேசாலை அகதி முகாமில் அடிக்கடி தீ விபத்து

## மர்மத் தீ குறித்து மக்கள் பீதி

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தின் பேசாலையில் அகதிமுகாம் பகுதியில் அடிக்கடி தீ விபத்து சம்பவங்களினால் அப்பகுதி மக்கள் அச்சமும் பீதியும் அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

யாரும் இல்லாத வேளையில் இனம் தெரியாத நபர்களால் தமது குடிசை தீக்கிரையாக்கப்பட்டதாக தொழிலாளி ஒருவர் பொலிசாரிடம் முறைப்பாடு தாக்கல் செய்துள்ளார். இச் சம்பவம் கடந்த பதின்னான்காம் திகதியன்று காலை பத்துமணியளவில் நடைபெற்றது.

இதே பகுதியில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் பொறுப்பிலிருக்கும் அகதி முகாம் கொட்டில்களும் சில வாரங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் தீக்கிரையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஷெல் வீச்சு

காரைநகர்ப் பகுதியில்நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல் முதல் பொன்னாலைப் பகுதியை நோக்கி இடைக்கிடையே எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

இவ் எறிகணைகள் கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே வீழ்ந்து வெடித்தன. ஆயினும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

## மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம்

வடமராட்சிக் கோட்டம் பருத்தித்துறை வட்டத்தில் 6-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு எட்டுமணிக்கு காந்தியூர் வீரபத்திரர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டம் வடக்கு வட்டத்தில் கடற்புலிகள் பிரதேசங்களில் 5-ம் 6-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றிரவு 7.00 மணிக்கு கற்கோவளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகளில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## உருவப்படம் திரை நீக்கம்

(கொழும்புத்துறை)
ஆனையிறவுச் சமரில் வீரச்சாவடைந்த புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த வீரவேங்கை அமுதப்பிரியாவின் திரு உருவப் படம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை நாவாந்துறையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. (24)

## கிறிஸ்தவ

...ரும் பக்கச் சார்பாக நடந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதே வேளை மகாவலித் திட்டப் பகுதியில் கிறிஸ்தவ ஆலயங்கள் சில தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் அங்கு மேற்படி அமைப்புக்கள் தமது வேலைகளை மேற் கொள்வதற்கு உத்தியோகப்பற்றற்ற தடைவிதிக்சப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கிறிஸ்தவ அமைப்புக்களின் நடவடிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செய்ய தவறினால் பௌத்த மதம் இந்த நாட்டில் பெரும் பான்மையை இழக்க வேண்டி வரும் எனவும் எனவே இதற்குஉடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சகல பௌத்த பீடங்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (நி),(2)

# பௌத்தகுருமார்குழுயாழ்.வர பாதுகாப்பு அனுமதி மறுப்பு

(கொழும்பு)
பௌத்த மத குருமாரின் தூதுக் குழுவொன்று யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதியை வழங்க கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு மறுப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் உண்மை நிலையைக் கண்டறிவது தொடர்பாகவும், பொது மக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்காகவும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவும் பௌத்த மத குருமார் சிலர் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருந்தது தெரிந்ததே. இவர்களுக்கான அனுமதியை வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து இவர்களது விஜயம் தடைப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசியல் எதிர்காலத்தை தேர்தல் காட்டும்

## பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

தென்பகுதியில் ஜே.வி.பி. யின் நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கானோர் தொடர்பான புகார்கள் மற்றும் எம்பிலிப்பிட்டிய பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டசடலங்களின்எச்சங்கள் என்பவற்றிற்கு மத்தியில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் அரசில் எதிர்காலம் எத்தகையதாக இருக்கும் என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தல் காட்டும் என்று பி.பி.ஸியின் கொழும்பு முகவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வடக்கிலும், தெற்கிலும் இடம்பெற்ற மோதல்களில் அரசு எந்தவகையில் செயற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் இந்த நடவடிக்கைக்கான செல்வாக்கு என்ன என்பதை யாழ்க்கு தேர்தல் காட்டும்எனவும் தெரிவித்தார்.

## கரும்புலிகள் நாள் அரங்கப் போட்டி ஆரம்பம்

கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் ஏற்பாடுசெய்திருக்கும் மாவட்டமட்டத்திலான அரங்க / கிராமிய ஆடல் கலைப் போட்டிகள் நாளை முதல் நடைபெறவுள்ளன.

நாளை காலை 8.30 மணி முதல் சட்டநாதர் வீதி நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் பாரம்பரிய அரங்க போட்டிகளும் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் மாலை 3.30 மணி முதல் சிறுவர் அரங்க போட்டிகளும் யாழ்/வைத்தீஸ்வராகல்லூரியில் 3 30 மணி முதல் கும்மி கோலாட்ட ஆடல் கலைப் போட்டிகளும் புதன் கிழமை காலை 8 மணிமுதல் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நவீன அரங்கப் போட்டிகளும் மாலை 3.30 மணி முதல் யா/வைத்தீஸ்வரா கல்லூரியில் கரகம் காவடி ஆடல் கலைப் போட்டிகளும் நடைபெறும் என்பதனை யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர் குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் எனவும் போட்டியாளர்கள் குறித்த நேரத்தில் தங்களுக்குரிய மண்டபத்தில் சமுகம் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## தேர்தல் நியாயமானதாக இருக்கும் என நம்புகிறேன்

-தேர்தல் ஆணையாளர்

பொதுத் தேர்தலில் நியாயமான, சுயேட்சையான வாக்குப் பதிவுக்கு இடம் இருக்கும் என்று தான் நம்புவதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் எல்லாப் பகுதியிலும் தேர்தல் நடத்த முயற்சிக்கப்படுவதாகவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## ராணுவச்சிப்பாய் அட்டகாசம் 3 பிச்சைக்காரர்கள் பலி

(மகரவில)
சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் மது போதையில் மேற்கொண்ட அட்டகாசச் செயலுக்கு மூன்று பிச்சைக்காரர்கள் பலியாகினர்.

கடந்த புதன் கிழமை போயா தினத்தன்று இச் சம்... மகர வில இராணுவ சிப்பாயே மது போதையில் வீதியோரத்தில் இருந்த பிச்சைக் காரர்களை கடுமையாகத் தாக்கினாராம். இதன் போதே இப் பிச்சைக்காரர்கள் மூவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதனைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த மகர...

## யாழ். குடாநாட்டில் புற்றுநோயாளர் அதிகரிப்பு

# ஆசிரிய சேவை நகல்திட்டம் ஆசிரிய சங்கங்களால் நிராகரிப்பு

கல்வி அமைச்சினால் ஆசிரிய தொழிற் சங்கங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆசிரிய சேவை தொடர்பான நகல் திட்டம், ஆசிரிய சங்கங்களால் நிராகரிக்கப்பட்டு, ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளும், அமைச்சு அதிகாரிகளாலும் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்தை அமுல் படுத்துமாறு ஆசிரிய சங்கங்கள கோரியுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது கல்வி அமைச்சின் அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டமானது 80 வீதமான ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற மாட்டாது. விசேடமாக பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர்களின் சம்பளத் திட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு சேவை மூப்பு மூலம் இயல்பாகவே கிடைக்க வேண்டிய பதவி உயர்வு முறை கற்போதைய நகல் திட்டத்தில் நீக்கப்பட்டமையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விசேட...ள்ளனர். ஆசிரியர் வகையினரை 5 பகுதியினராகப் பிரித்து அது 1995 இல் நான்கு வகையாகவும் 2000-ம் ஆண்டில் மூன்று வகையினராகவும் அமையக் கூடிய திட்டத்தையே முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆசிரிய சமூகத்தை பல கூறுகளாகப் பிரிப்பது ஆரோக்கியமானதல்ல என்றும் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நகல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள விபரமும், ஆசிரிய வகைகளும் பின்வருமாறு:

விசேட வகுப்பு 95,400-10x4, 800 - 143, 400 (வருடாந்தம்)

வகுப்பு - I (தரம் - 1) 74, 400 - 7x3,000 - 95,400 (வருடாந்தம்)

வகுப்பு - 1 (தரம்-2) 49, 200 - 15x1, 560 - 72,600 (வருடாந்தம்)

வகுப்பு - 2 (தரம்-1) 39, 540 - 1x780 - 10x1200- 3x 1560-57,000 (வருடாந்தம்)

வகுப்பு - 2 (தரம் - 2) 32, 520 - 10x780 - 2x1200-42 ...

...மாறு:-

15 வருட சேவையுடைய பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன், முதுநிலைமாணிப்பட்டம் பெற்றிருந்தால் வகுப்பு-1 தரம் - 1 இல் இணைத்துக் கொள்ளப்படுவர்.

05 வருட சேவையுடைய பட்டதாரி ஆசிரியர்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் முதுநிலைமாணிப் பட்டம் பெற்றிருந்தால் வகுப்பு-1 தரம் - 2 இல் இணைத்துக் கொள்ளப்படுவர்.

05 வருடத்திற்குக் குறைந்த பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் டிப்ளோமாவுடன் முதுநிலைமாணிப் பட்டம் பெற்றிருந்தால் வகுப்பு 2 தரம் - 1

பட்டதாரி ஆசிரியர்கள் - (பட்டப்பின் பட்டமில்லாத வர்கள் அனைவரும்) வகுப்பு-2 தரம் - 1 இல் இணைக்கப்படுவர்.

10 வருட சேவை மூப்புடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வகுப்பு - 2 தரம் - 1 இல் இணைக்கப்படுவர்.

10 வருடத்திற்கு குறைந்த ...

## யாழ். குடாநாட்டில்
## புற்றுநோயாளர் அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புற்றுநோய் வருடா வருடம் அதிகரித்து வருவதாக போதனா வைத்தியசாலையின் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது. 1991-ம் ஆண்டுமுதல் 1993-ம் ஆண்டு வரையிலான மூன்று வருட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது 1991-ல் 585 பேரும், 1992 இல் 842 பேரும், 1993இல் 1067 பேரும் புற்று நோயின் பாதிப்புக்கு இலக்காகியுள்ளது தெரியவந்துள்ளது கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 248 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்ட போது 168 பேர் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தது உறுதிப் படுத்தப்பட்டது. சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோரில் 67 சதவீதமானோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுளளது.

## கண்ணீர் அஞ்சலி



அமரத்துவமெய்திய

**சரஸ்வதி சிறிபத்மதாசன்**

**(விவசாய போதனாசிரியர் - விவசாய திணைக்களம், திருநெல்வேலி)**

23-06-94 இல் கொழும்பில் காலம் சென்ற எமது சக உத்தியோகத்தருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாகச் செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**விவசாய திணைக்கள உத்தியோகத்தர்**
**யாழ்மாவட்டம்**

(சி-9885)

னர்.

கடந்த புதன்கிழமை போயா தினத்தன்று இச்சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுளளது.

கள் மூவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதனைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த மகரவில பொலிசார்இராணுவ சிப்பாயை கைதுசெய்து பொலிஸ் காவலில் வைத்துள்ளனர்.

## வேட்பாளரை தெரிவுசெய்ய ஜனாதிபதி முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரவும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் நேற்று மாலை சந்தித்து ஆலோசனை நடத்தியதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி விக்கிரம வீரசூரிய, அமைச்சர்களான காமினி திசாநாயக்கா, றொனி டி மெல் ஆகியோரும் உடன் காணப்பட்டனர்.

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குவேட்பாளர்களைத்தெரிவு செய்யும் ஆரம்ப ஆலோசனைக் கூட்டமாக இச் சந்திப்பு இருக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் பரவலாக நம்பிக்கை தெரிவிக்கின்றன.

---

### பொ. ஜ

விளங்குவார் என எதிர் பார்ப்பதாகவும் குறிப்பிட்டன.

மேலும் திருமதி சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக இருக்கவேண்டும் என்பது தொடர்பாக பல கோரிக்கைகள் இருந்த போதும் இது தொடர்பாக கட்சிக்குள் எதுவித குழப்பமும் இல்லை எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### உலக

81 ஆயிரம் பேர் எனவும் றோமன் கத்தோலிக்கர் 103 கோடியே 43 லட்சத்து 22 ஆயிரம் பேர் எனவும் தெரிவிக்கிறது. (17)

---

### சிறிமாவுடன்

கொள்ள முயன்ற போதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

இந்நிலையில் அவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள அனுமதிக்க முடியாதென அவ்வட்டாரங்கள் தெரிவித்ததெனச் சந்தேசிய வானொலி கூறியது.

---

### செயலகம்

தம் திருத்தமாக கூறும் வகையிலும் அமைந்த வானொலிச் செய்தியொன்றை அரசுக்கு இன்று காலை அரச அதிபர் அனுப்பி வைக்க இருக்கிறார்.

**யாழ். ஸ்ரீதரில்**
**STEVENSPIELBERG**
இயக்கிய
**JURASSIC PARK**
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 4, 6
சனி, ஞாயிறு 1030, 4.6 மணி
(சி-9872)

தைய நகல் திட்டத்தில் நீக்கப்பட்டமையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விசேட பதவிகளுக்கு பதவி உயர்வு பெற முடியாத நிலை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சினால் தற்போது தயாரிக்கப்பட்ட நகல் திட்டத்தில் ஆசிரியர்கள் ஏழு வகையினராக பிரிக்கப்பட்டு

---

### கொழும்பில்

ட்டத்தில் போட்டியிட்டால் அங்கு தோல்விஅடைய வேண்டிவருமென அஞ்சுகிறார் கடந்த தென்மாகாண சபைத் தேர்தலின்போது கம்பஹா மாவட்டத்தில் ரணிலின் தொகுதியான பிபிலையில் ஐ.தே.க. தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்த கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட விரும்பியதாக தெரியவருகிறது.

இவரின் விருப்பத்தை அமைச்சர் சிறிசேன கூரே ஆட்சேபித்துள்ளார்.

---

### நிர்வாக

தான் அண்மையில் யாழ். குடா நாட்டிற்கு பயணமொன்றை மேற்கொண்டு செல்ல முற்பட்டதாகவும் அப்போது அதற்கான அனுமதியை பெறுவதற்கு தான் நிர்வாக அதிகாரிகளின் கெடுபிடிக்கு உள்ளானதாகவும் தெரிவித்துள்ளார்.

சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பியா ஆகியநாடுகளின் புரட்சிக்கு காரணம் நிர்வாக அதிகாரிகளின் கெடு பிடிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததுதான் என்றும் எனவே இந் நிலை வடக்கு கிழக்கிலும் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

1560-57,000 (வருடாந்தம்)

வகுப்பு - 2 (தரம் - 2) 32,520 - 10x780 - 2x1200-42 720 (வருடாந்தம்)

வகுப்பு - 3 27,420 -9 x, 660 - 8x780 - 39,600 (வருடாந்தம்)

பயிலுநர்களின் சம்பளத் திட்டம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தற்போதைய சேவையில் உள்ள ஆசிரிய தொகையாகிய 175,000 ஆசிரிய தொகையை மையமாகக் கொண்டு ஒவ்வொரு ஆசிரியர் பகுதிக்குமுரிய தொகை பின்வருமாறு பகிரப்படும். விசேட வகுப்பு - 5000, வகுப்பு - 1-35000, வகுப்பு-2 115000, வகுப்பு - 3-20000

தற்போதைய ஆசிரியர்களை மேற்படி சேவையில் உள்வாங்கும் முறை பின்வரு

யர்கள் வகுப்பு - 2 தரம் - 1 இல் இணைக்கப்படுவர்.

10 வருடத்திற்கு குறைந்த சேவையை உடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வகுப்பு - 2 தரம் - 2 இல் இணைக்கப்படுவர்.

10 வருட சேவையை உடைய பயிற்றப்படாத ஆசிரியர்கள் வகுப்பு-2 தரம் -2-ல் இணைத்துக்கொள்ளப்படுவர்

10 வருடத்திற்கு குறைந்த சேவையுடைய பயிற்றப்படாத ஆசிரியர்கள் வகுப்பு 3 இல் இணைக்கப்படுவர்.

புதிய ஆசிரிய சேவைத்திட்டத்தில் இணைக்கப்படும் போது சேவை மூப்பு அடிப்படையின் படி உயர்ச்சி வழங்கி சம்பளம் மாற்றியமைக்கப்படும் என்பதுப் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## ஆசிரியர் சேவைத் திட்டம் விரைவில் அமுலாகும்

இலங்கை நிருவாகசேவை, இலிகிதர் சேவை போன்று புதிதாக ஆசிரியர் சேவைக் திட்டமொன்று உருவாக்கப்பட்டு எதிர்வரும் அக்டோபர் 6-ம் திகதி நிகழும் ஆசிரியர் தினத்தன்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டுளளது.

கல்வியமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு, தேசியக் கல்விச் சேவைககுழு ஆகியவை செய்துள்ள சிபார்சின்படி இந்த ஆசிரியர் கல்வித் திட்டம் உருவாக்கப்படும் என கல்வியமைச்சின் பேச்சாளர்தெரிவித்துளளார்.

இப்போது இதற்கான நடவடிக்கைகளைக் கல்வியமைச்சின் செயலாளர் தலைமையிலான விசேட குழு மேற்கொண்டுளளது இது விரைவில் வெளியிடப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## தெகிவளை சுற்றிவளைப்பு ஆறு பேர் கைது

தெகிவளைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வாகனமொன்றை மறித்து சோதனையிட்ட போது அதிலிருந்த இளைஞர் ஒருவர் சயனைட்அருந்தி மரணமடைந்தமை தெரிந்ததே. இச்சம்பவத்தையடுத்து இவ் வீடு சுற்றிவளைக்கப்பட்டது.

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.